கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்

தெனியான்

தெனியான்

# சுடர்
# CHUDAR



ஆனி 1980 — ரூபா 1.50 சதம்

# வாசகர் வாய்மொழி

## மாசு கற்பித்துவிட்டார்

சிறுகதைகள் நன்று, குறிப்பாக புது எழுத்தாளர் செல்வி சந்திரா அரசக்கோன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். கவிதைகள் நன்று. துணுக்குகளில்தான் சுடருக்கு மாசு கற்பித்துவிட்டார் அன்பர் க. சிவசங்கரநாதன். அவர் அனுப்பிய துணுக்கு அண்மையில் தமிழக சஞ்சிகையான இதயம் பேசுகிறது என்ற சஞ்சிகையில் வெளியானது.

பொ. மகேந்திரராசா, வன்னியூர்.

## குமாருக்கு நல்ல 'டோஸ்'

வைகாசிமாத சுடரில் வழமைபோல் "அரி"யார் திறமையாக விளாசியிருக்கிறார், அதிலும் குறிப்பாக, "உங்கள் மூட்டையைக் கட்டிக்கொள்ளுங்கள்" என்று குமார் பொன்னம்பலத்துக்கு நல்ல டோஸ் கொடுத்துள்ளதற்கு என் விசேடமான பாராட்டுக்கள், மற்றும் கலையகம் (குடியேற்றம்) கேள்விக்குறியுடன் முடித்து விட்டீர்கள், சிந்திக்க வேண்டிய விடயம் அது. எழுத்தாளர்களின் இலக்கிய சந்திப்பு பகுதியில் இரு கவிஞர்கள் மனம் விட்டு உரையாடியதை கேட்க முடிந்தது. மலர்க்கவிதை மலர்ச்சரங்கள், நக்கீரன் பதில்கள், சிறுகதைகள், கவிதைகள் யாவும் நன்று.

பொ. குமாரகுலசிங்கம்,
கடற்கரை வீதி, நாவாந்துறை.

## "மணி"க்கு பாராட்டுக்கள்

வைகாசி—சுடர் இதழில் வெளிவந்த "குருஷேத்திரம்" பரிசுக்கதை அருமையிலும் அருமை. எஸ். ஜெகநாதன் பாராட்டப்பட வேண்டியவர். "அரி"யர் அன்னக்காவடி எடுத் "ஜூனியர்" குமாருக்கு நல்ல பதிலடி கொடுத்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுக்கள், மற்றும், கவிதைகள், சிறுகதை, நக்கீரனின் பதில்கள், நன்று. எழுத்தாளர்களின் இலக்கிய சந்திப்பு பகுதியில் இரு கவிஞர்களை சந்திக்க வைத்த "மணி"க்கும் என் பாராட்டுக்கள்.

கனகராஜா நேசராணி,
இல: 4. நாவலர் றோட், நாவாந்துறை.

## பாராட்டும் நன்றியும்

வைகாசி திங்கள் சுடர் இதழில் துணை ஆசிரியர் அரி அவர்கள் மனம்விட்டு சொன்னவைகள் உண்மையே. தலைவர்கள் நிலை அதுவே. பலதையும் பகுத்தறிந்த பழைய தலைவர்கள் இன்று மிதவாத போக்குடன் தான் இருக்கிறார்கள். இந்த உண்மை நிலையை இடித்துரைத்த அரி அவர்கட்கு என் நன்றியும் பாராட்டுக்களும்.

க. செல்லத்தம்பி,
வாய்க்காலடி வழி, திருப்பழுகாமம்,

## 'தமிழ்ப்புதல்வி'க்கு பாராட்டுக்கள்

வைகாசிச் சுடரின் அட்டையின் வண்ணம் அழகாக இருந்தது. பரிசுக்குரிய 'குருஷேத்திரம்' கடந்து விட்ட வரலாற்றை ஞாபகப் படுத்துவதாய் இருக்கிறது. 'மணிக்கவிதை மலர்ச்சரங்கள்'சிறந்த மணம் பரப்புகின்றன. பெண்களிடையே கவிஞர்கள் மிகக் குறைவு என்பதை தகர்ப்பது போலவும், பெண் சமுதாய விழிப்புணர்வுக்குத் துணை நிற்பது போலவும் காணப்படுகின்ற 'தமிழ்ப் புதல்வி' யின் கவிதாவுணர்வை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

பேரின்பராஜா,
தபாற் தந்தித்திணைக்களம், கொழும்பு.

## ஏன் இந்த இரவல் பண்புகள்?

'உரிமை வேண்டும்' கவிதை வேண்டி நின்று பாடுதற்கு அவசியமானதே. 'கவிதை நெஞ்சில் பொங்காதோ'—கவிதை ஏற்கனவே கவிஞர் செ. குணரத்தினத்தின் பெயரில் ஓவியத்துடன் சுடரிலே வெளியானது. ஏன் இந்த இரவல் பண்பு தொடர வேண்டும்? இது மிகக்கவலைக்குரிய ஒன்றாக, முன்னேறத் துடிக்கும் இளம் உள்ளங்களின் எழுத்தாற்றலைச் சாகடிப்பது போலிருக்கிறது 'இலக்கியப் பிரச்சினைகளை'த் தெளிவுபடுத்திக் கேள்வியும் கேட்டுவைத்த 'பிரம்மா' அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்!

தமிழ்ப்புதல்வி,
கொழும்புப் பல்கலைக்கழகம்.

## இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

காவலூர் எஸ். ஜெகநாதனின் குருஷேத்திரம் என்ற கதை ஒரு உணர்ச்சிப் படைப்பாக அமைந்துள்ளது. இக்கதையை எமக்கு தந்த எஸ். ஜெகநாதனுக்கும் தரமான கதைகளை எமக்கு தரும் சு—ருக்கும் எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

எம். தங்கராஜா,
கோவுஸ்ஸ எஸ்டேட், எல்ல.

தெணியான்

## மேடை எங்கே?

'அரி'யின் 'மனம் விட்டு சில வார்த்தை'யில் குமார் பொன்னம்பலத்துக்கு கொடுத்த சொல்லடி நன்று. நக்கீரனின் மேடையைக் கண்டு பல மாதமாகின்றனவே. மீண்டும் மேடையில் நக்கீரனைக்காணத்துடிக்கிறேன். காவலூர் எஸ். ஜெகநாதனுடைய குருஷேத்திரம் பரிசுக்குரியதே.

இருஷ்.

## கவிதைத் திருடர்

சுடரில் வெளியான கவிதையையே கு. லோகநாதன் என்பவர் வரிக்குவரி திருடியுள்ளார். இவருக்கு ஏன் இந்த வேலை? சந்திரா அரசக்கோனின், 'ஒரு ஒற்றைக் குயிலின் அலறல் என்ற சிறுகதை இதயத்தை தொடும் உணர்ச்சிமயமான படைப்பு.

கோவுஸ்ஸ - ராம்ஜீ, எல்ல.

## 'அரி'யை கண்டுபிடித்துவிட்டேன்

'அரி' அவர்கள் மனம்விட்டுச் சில வார்த்தைகளில் கூறியிருப்பது அப்பட்டமான உண்மையே. துணிவோடு மனம்விட்டு சில வார்த்தைகளை அள்ளி வீசும் 'அரி' அவர்களைத் தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு காலமும்...? ஆர்வத்தோடு சுடரை ஆழப்படித்திருந்தால் வாகரை வாணனும், அமரர் அரியநாயகமும் 'அரி'யாகி இருப்பார்களா? உங்கள் கண்டு பிடிப்புக்கள் எல்லாம் தவறு. நான் கண்டு பிடித்துவிட்டேன். ஆனல் உஷ்! மூச்சுவிட மாட்டேன்.

செல்வி கங்கா - மங்கை,
பருத்தித்துறை வீதி, சரசாலை.

## தகர்த்தெறிய முயலவேண்டும்

மாத்தளை வடிவேலனின் "அவைகள் அங்கேயே இருக்கட்டும்" எனும் சிறுகதை; கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்து மலையக ஆசிரியர்களினது போக்கினை அப்படியே துலாம்பரமாக படம் பிடித்துக் காட்டுகிறது. கதாசிரியன் உருவில் நின்று உண்மை சம்பவங்களை சிறுகதை வாயிலாக சாடியுள்ளார். அவருடைய துணிச்சலுக்கும், சுடரின் நடுநிலைக்கும் எனது நல்வாழ்த்துக்கள்!

கவனிப்பு: அன்று எமது சமுதாயம் அப்படியானதொரு கடை நிலையில் உழன்று கொண்டிருந்தது. ஆனல் இன்றோ விடுதலை உணர்வு உந்தப்பட்டு, இளம் தலைமுறையினரிடையே புதிய அமைப்பு முறை உருவாகி வருவதை கதாசிரியரும் ஒப்புக்கொள்வார் என எதிர்பார்க்கிறேன்.

இன்னும் இனப்பற்று, மொழிப்பற்று, இலட்சியப்பற்று, அற்ற சில சுய நலமிகள் வடக்கு, கிழக்கு, வன்னி, மலையகம், அரிஜனர் என தமிழ் மக்களைப் பிரித்தாள முயல்வதையும், கதாசிரியர்கள் தகர்த்தெறிய முயலவேண்டும் என தமிழன்னையின் சார்பில் அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இராஜக்கோன் சதாபக்தி,
கற்கிடைமடு, ஒட்டுசுட்டான்.

# மனம்விட்டு சில வார்த்தைகள் "அரி"

சுமார் ஐந்து மாத கால இடைவெளிக்குள் இவ்வளவு பெரிய மனமாற்றமா? தமிழக வாக்காளர்கள் மிக விசித்திரமான பேர்வழிகள் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது—நமது எதிர்ப்பார்ப்புகளை எல்லாம் தலைகீழாக மாற்றியமைத்துவிட்டார்களே!

1977ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலிலே தி. மு. க. வின் சரித்திரமும் அதன் ஆயுளும் முடிந்து விட்டதாக பலராலும் கணிக்கப்பட்ட அந்த வேளையிலே அனைத்துக்கட்சிகளாலும் கைவிடப்பட்ட நிலையில் எவ்வித கூட்டுமேயில்லாமல் தனித்து நின்று 48 இடங்களில் வெற்றிபெற முடிந்த கலைஞருக்கு நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் 'மாபெரும்' கட்சியான இ. காங்கிரஸுடன் கூட்டணி அமைத்தும் 38 இடங்களையே பெற முடிந்தது என்றல் அதற்குரிய காரணம் தெளிவாக நமக்கு புரிகிறதுதானே!

தமிழக இந்திரா காங்கிரஸார் கலைஞரின் காலை வாரிவிட்டார்கள். கூட்டணியின் வெற்றிக்காக கலைஞர் தெளிந்த மனதுடன் பாடுபட்டு உழைத்ததுபோல் இ. காங்கிரஸார் செயல்படவில்லை. அவர்கள் தமது கட்சி வேட்பாளர்களின் வெற்றிக்காக மட்டுமே உழைத்தார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகள் எல்லாம் அண்ணுநகரில் கலைஞர் தோற்கடிக்கப்படவேண்டும்; தம்மை விட தி. மு. க. குறைந்த இடங்களில் வெற்றிபெற வேண்டும் என்பதுதான். இதை நாம் சொல்லவில்லை தமிழகத்தில் இருந்துவந்த செய்திகள் தெரிவிக்கின்றன.


தமிழ் நாட்டில் காங்கிரசாருக்கு தனித்துவமான ஒருதலைமை இல்லை; கருப்பையா மூப்பனர், இளையபெருமாள், எம். பி. சுப்பிரமணியம் ஆகியோரின் பிடியில் சிக்கி மூன்று பிரிவுகளாக இயங்கும் இந்திரா காங்கிரஸாரை நம்பி அவர்களுடன் கூட்டு வைத்த கலைஞருக்கு இது பாடமாக இருக்கவேண்டும்.

மத்திய ஆளுங்கட்சியுடன் உறவு கொள்ளும் மாநில கட்சிகளை தமிழக மக்கள் எப்போதும் நிராகரித்தே வந்துள்ளார்கள்.

சரண்சிங் கட்சியுடன் உறவு வைத்த அ. தி. மு. க. வுக்கு பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த தோல்வியே, இந்திரா கட்சியுடன் உறவு வைத்த தி. மு. க. வுக்கும் சட்டசபைத் தேர்தலில் கிடைத்திருக்கிறது.

'கழுத்தறுப்பு'வேலை செய்யும் கட்சியுடன் உள்ள உறவை கலைஞர் துணிச்சலாக துண்டித்தால் அதுவே பெரிய வெற்றியாக அமையு

# பாரதிதாசன்



## போற்றிய இலங்கைத் தமிழர்:

### யாழ்நூல் தந்த விபுலானந்தர்

(இப் புகழ்அஞ்சலி "தமிழ்நிலம்" சஞ்சிகையில் 1948—11—1 ந் திகதியன்று வெளியாகியது.)

எத்தமிழால் வையம் இரும்பூது கொண்டிடுமோ
அத்தமிழால் வாழ்வை அகப்படுத்தி முத்தமிழால்
தொன்மொழிக்குத் தோலா துழைத்துயர்ந்தோன் சொல்லருமை
தென்மொழிக்கு யாழிசைத்தோன்.

அறிவறிந்த நாள்முதலாய் அந்தமிழும் தொண்டும்
நெறியறிந்த நீர்மையன்; நேர்மைக் குறியறிந்து
முத்தமிழ்க்குப் பண்ணுனன் முச்சங்க யாழ்கண்டான்
எத்தமிழுக்கும் ஈந்தான் இலக்கு!

பாழ்நூலே செய்து பதிப்பித்துப் பைந்தமிழைக்
கூழ்நூலே என்று கொடுக்கையில் யாழ்நூலை
இந்தா எனக் கொடுத்தான் எண்ணரிய ஆய்வின்பின்
சிந்தா பணிச்சிலம்பில் தேர்ந்து.

பெருங்கதையால் வாழ்வைப் பெருக்காமல். வையப்
பெருந்தகைக்கே வாழ்வை துறந்த அருந்தகையன்
தாயைத் துறந்தாலும் தண்டமிழைத் தான்துறவா
தூயனை வாழ்த்தல் என்தொண்டு.

சங்கநூல் விற்பனையில் சாரும் மடச்சோற்றில்
தங்கநூற் காகத் தனையடகாய் எங்குமே
வைக்காமல் அண்ணுமலைப்பல் கலைக்கழகம்
கைக்கொடுத்தான் யாழ்நூலைக் கொண்டு.

எங்கே இசைநுணுக்கம்? எங்கே பெருநாரை?
எங்கே நம் சிற்றிசை? பேரிசை? பொங்கிசைநூல்?
எங்கே எனக் கேட்டார்க் கெல்லாம் இசை யாழ்நூல்
இங்கே என வீந்தான் ஏந்து.

ஏழிசையும் செந்தமிழே ஏமுற வையத்து
வாழிசை எல்லாம் வழங்குதமிழ்ச் சூழிசையே
காணுங்கள் என்றுன் கலைவிபு லானந்தன்
பூணுங்கள் என்றுன் புரிந்து.

சீர்செழித்த செங்கோட்டு யாழுடன் செந்தமிழ்
பேர்செழித்த பேரியாழ் சீறியாழ் வில்யாழ் நல்
எத்தனை உண்டோ இசைக்கருவி யாழ்வகைகள்
அத்தனையும் காட்டினுன் ஆழ்ந்து.

ஆங்கிலமும் ஆரியமும் நன்கே அறிந்திருந்தும்
பாங்கிருக்கும் பைந்தமிழ்க்கே தன்வாழ்வை ஒங்கிருக்கச்
செய்விபுலானந்த செம்மைத் துறவியினைக்
கைகுவித்து வாழ்த்தும் என்வாய்.

செம்மை நலங்கனிந்த செய்யுளைத் தீட்டுங்கை;
மும்மைத் தமிழை முழக்கும் வாய்; அம்மம்ம!
தெற்கே இலங்கை முதல் செல்லும் இமயம்வரை
பற்றே படரும் தமிழ்.

(அனுப்பியவர்:
ச. ஸ்ரீகாந்தா)

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத்திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2011
ஆனி—1980
சுடர்—6
ஒளி—3
ஆரம்பம்: சித்திரை 1975
தொலைபேசி: 23411

வெளியிடுபவர்கள்:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக மாவத்தை,
கொழும்பு—12.
ஆசிரியர்: கவிஞர் காசி ஆனந்தன்
துணை ஆசிரியர்: "அரி"

# தமிழக தேர்தல்

தமிழக தேர்தல் சூடாக ஆரம்பித்து சுலபமாக முடிந்துவிட்டது.

வடமாநிலங்களைப்போல் தமிழகத்தில் துப்பாக்கிவேட்டு கேட்கவில்லை. தலைகள் உருளவில்லை.

இருந்தும் தேர்தல் போட்டி கடுமையாக இருந்திருக்கிறது என்பது மட்டும் நிதர்சனமாகத் தெரிகிறது.

இலட்சக்கணக்கில் வாக்குகள் விழுந்த இடத்தில் வெற்றி—தோல்வியை சில நூறு ஆயிரம் வாக்குகள் பல இடங்களில் நிச்சயித்து இருக்கின்றன.

மொத்த வாக்குகளில்—

| | | |
|---|---|---|
| அ. தி. மு. க. அணிக்கு | — | 92 இலட்சம். |
| தி. மு. க. அணிக்கு | — | 83 இலட்சம். |
| நூற்று வீதத்தில் அ. தி. மு. க. | — | 49.23% |
| தி. மு. க. | — | 44.47% |
| வித்தியாசம் | — | 4.76% |

ஆனால் இரண்டு கூட்டணிகளுக்கும் கிடைத்த இடங்களோ விழுந்த வாக்குகளுக்கு பொருத்தமில்லாமல் அமைந்துவிட்டது.

மொத்தம் 234 தொகுதிகளில் அ. தி. மு. க. அணி 160 தொகுதிகளையும், தி. மு. க. அணி 69 தொகுதிகளையும் பெற்றிருக்கிறது. அதாவது 50% வாக்குகளைப் பெற்ற அணி 68% இடங்களையும்; 45% வாக்குகளைப்பெற்ற அணி 30% இடங்களை மட்டும் பெற்றிருக்கிறது.

மொத்தம் 175 இலட்சம் வாக்காளர்களில் 4½ இலட்சம் வாக்காளர்களே வெற்றி தோல்வியை 'நிச்சயித்து' இருக்கிறார்கள்.

வென்ற அணிக்கு தலைக்கனம் பிடிக்கவும் தேவையில்லை.


தோற்ற அணிக்கு தலைக்குனிவு ஏற்படவும் தேவையில்லை.

தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி—அது கூட்டாட்சியாக இருந்த போதிலும்—வருவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. இதுவே தி. மு. க. அணி தோற்றதற்கு ஒரு காரணமாக—முக்கிய காரணமாக—இருக்கவேண்டும்.

எம். ஜி. ஆரின் அ. தி. மு. க. ஈழத்தமிழர் பிரச்சினைகளில் அக்கறை காட்டுவதில்லை என்ற மனக்குறை எம்மிடம் உண்டு. இதை மறைத்துப் பயனில்லை. இந்த அலட்சியம் தெரிந்து செய்யப்படுகிறதா தெரியாமல் செய்யப்படுகிறதா என்பது தெரியவில்லை.

எனினும் எம்மைப் பொறுத்தளவில் அண்ணாவின் தம்பிகளே முதல் அமைச்சராகவும், எதிர்க்கட்சி தலைவராகவும் வந்திருப்பதை கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

# குரூர ரசனைகள்



கோகிலா மகேந்திரன்.

வெளியில் மழை சன்னமாகத் தூறிக் கொண்டிருந்த போதுதான் அந்தச் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது.

"தபால் போலை கிடக்கு.. போய்ப் பாருங்கோவன்......" அடுப்பில் உலை வைத்துவிட்டு நெருப்புடன் போராடிக் கொண்டிருந்த மீனாட்சி குரல் கொடுத்தாள்.

வெளி விருந்தையில் போடப்பட்டிருந்த ஈசிச் செயரில் சாய்ந்து படுத்துக் கொண்டு... பக்கத்து வீட்டில் இரவல் வாங்கிய அன்றைய பேப்பர் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த செல்லையா உபாத்தியாயர் மெதுவாக எழுந்து 'பொத்தல்கள்' பல கொண்ட அந்தப் பழைய குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு படலைக்குப் போனார். மழை பொழிந்துகொட்டாமல் தூறிக்கொண்டிருந்த படியால் போலும், மழைத்துளி குடையின் துவாரங்களுக் கூடாக உபாத்தியாயரின் தலையை நனைக்கவில்லை.

"யார் கடிதம் போட்டது"? உபாத்தியாயர் முற்றத்திற்கு வந்தபோது மீனாட்சி உள்ளிருந்தவாறே புதிதான ஒரு ஆச்சரியத்துடன் கேட்டாள். உபாத்தியாயர் பாடசாலையில் படிப்பித்த காலங்களில் என்றால் அடிக்கடி கடிதங்கள் வரும். 'பென்சன்' எடுத்த பிறகு கடிதங்கள் வருவதும் குறைந்து விட்டது. அவருக்குப் புத்திர பாக்கியமும் கிடையாது. யார் கடிதம் போடப் போகிறார்கள்?

மூக்குக் கண்ணாடியை நிமிர்த்தி விட்டுக் கொண்டே கடிதத்தை விறுவிறென்று உடைத்தார் அவர். அவர் கண்களில் திடீரென ஒரு பரவசம் மின்னியது. புதிய விடயந்தான்!

ஜனரஞ்சக எழுத்தாளர் ஒன்றியத்திலிருந்து அந்தக் கடிதம் வந்திருந்தது. உபாத்தியாயரின் இருபத்தைந்து வருட இலக்கியச் சேவையைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி "இலக்கிய மன்னன்" என்ற பட்டமும் சூட்டிக் கௌரவிக்க இருக்கிறதாம் ஜனரஞ்சக எழுத்தாளர் ஒன்றியம். விழாவிற்கான தேதியும் குறித்து விழாவில் பாரியார் சகிதம் தவறாமல் வந்து கலந்து கொள்ளும்படி ஒன்றியத் தலைவர் எழுதியிருந்தார்.

கடிதம் முழுவதையும் படித்தவுடன் முகம் முழுவதும் தாமரையென மலர்ந்து விட்டது உபாத்தியாயருக்கு! வாலிபம் திரும்பிவிட்டதோவெனப் பார்ப்பவர் ஐயுறும் படியான ஒரு துள்ளலுடன் அநாயாசமாக நடந்து கடிதமும் கையுமாக மனைவியின் முன் போய் நின்றார் அவர்.

"பாத்தியே! நெடுக இருந்து எழுதி எழுதி என்னதான் கிழிக்கிறியள்?... ஒரு ஐஞ்சு சதத்து வருமானம் இருக்கோ என்டு திட்டுறனியெல்லே.. ... வந்திருக்கு இப்ப......"

"என்ன வந்திருக்கு? காசோ? எவ்வளவு... ஆர் அனுப்பினது?" என்று அரிசியில் நெல்லுப் பொறுக்கிக் கொண்டிருந்த அலுவலையும் நிறுத்தி விட்டு நிமிர்ந்து கேட்டாள் மீனாட்சி.

"எந்த நேரமும் உனக்குக் காசு காசெண்டு காசுப் பைத்தியம். மனிசனுக்குக் கௌரவந் தானே பெரிசு. புகழ்தான் பெரிசு. எனக்குப் பாராட்டு விழா வைக்கப் போறாங்களாம்.... உன்னையும் கூட்டிக் கொண்டு வரச்சொல்லித்தான் எழுதியிருக்கு.. உடலை நிமிர்த்தி உசாராகப் பேசினார் உபாத்தியாயர்.

## குழந்தை ஆராய்ச்சி!

பிறக்கும்போது அங்கவீனமாகச் சில குழந்தைகள் பிறக்கிறதல்லவா? தாயின் கருவில் இருக்கும்போதே அதைச் சரி செய்யும் முறையை அமெரிக்காவில் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

— வி. ந. ஸ்ரீதரன்.

மீனாட்சிக்கும் உள்ளூரப் பெருமைதான். ஆனாலும் கணவருக்கு முன்னால் விட்டுக் கொடுக்காமல் "வீட்டிலை எத்தினை வேலையள் காசில்லாமல் முடங்கிக் கிடக்கு...... பாராட்டும் கூட்டமும் வைச்சு என்ன பிரயோசனம்..." என்று முனகிக் கொண்டே அரிசியை உலையில் போட்டாள் அவள்.

அன்று மத்தியானம் அவள் பரிமாறிய சோற்றில் விசேடமானதொரு அன்புப் பிரவாகம் கரை புரண்டோடியதை அவர் கவனிக்கத் தவறவில்லை. உள்ளூர மெதுவாகச் சிரித்துக் கொண்டார். அடுத்து வந்த நாட்களில் தனது கணவனுக்கு நடக்க இருக்கும் பாராட்டினைப் பற்றி மிகைப்படுத்தப்பட்ட அலங்காரங்களுடன் ஊரில் உள்ள பெண்களுக்குக் கொட்டி அளந்துவிடவும் மீனாட்சி தவறவில்லை.

அந்த நாளும் வந்தது. பெட்டியின் அடியில் மடித்து வைத்திருந்த பழைய பெங்களூர் சேலையை எடுத்து, பூச்சி அரித்த பகுதியை உள்ளே விட்டுக் கட்டிக்கொண்டாள் மீனாட்சி. வெறுமை வெளியில் சருகாகப் பறப்பது போன்ற ஒரு உற்சாக உணர்வுடன் புறப்பட்டார் உபாத்தியாயர். முற்றத்தில் நின்று வானத்தை நிமிர்ந்து பார்த்தவர், "வானம் மப்பும் மந்தாரமுமாகக் கிடக்கு... மழை வரும்போலை இருக்கு மீனாட்சி" என்றார். வீட்டிலோ அந்தப் பொத்தல் குடை மட்டுந்தான் இருந்தது.

**இம்மாத பரிசுக் கதை**

'அந்தக் குடையை நாலு பெரிய மனுசருக்கு முன்னாலை என்னண்டு கொண்டு போறது. மழை வராது வாருங்கோ..." என்று கூறிக் கொண்டே முன்னால் நடந்தாள் மீனாட்சி. வீட்டுப் படலையைத் தடி வைத்துக் கட்டிவிட்டுப் பின்னால் தொடர்ந்தார் அவர்.

'தங்கமுத்து அக்கா! வீட்டை ஒருக்கால் பார்த்துக் கொள்ளுங்கோ. நாங்கள் போட்டு வாறம்......' என்று மீனாட்சி வேலிக்கு மேலே எட்டிக் குரல் கொடுத்தபோது அக்கம் பக்கத்துப் பெண்களெல்லாம் படலைக்கு வந்து உபாத்தியாயரும் மீனாட்சியும் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றனர். நெஞ்செல்லாம் நிறைந்தது போன்ற ஒரு மகோன்னத உணர்வுடன் பஸ்ஸில் ஏறி அந்தத் தம்பதிகள் விழா மண்டபத்திற்கு வந்தபோது மண்டபத்தில் அதிகம் கூட்டமில்லை. ஏதோ தெய்வ புண்ணியமாக அவர்கள் வந்து சேரும்வரை மழையும் பெய்யவில்லை. மண்டபத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சில தலைகள் மாத்திரமே தென்பட்டன. மேடைக்குத் தேவையான கதிரைகளை அடுக்குவதில் அப்போதுதான் சில இளைஞர்கள் ஈடுபட்டிருந்தனர். ஒரு இளைஞர் வந்து... அவர் அந்த ஒன்றியத்தின் செயலாளராக இருக்கலாம்...... உபாத்தியாயரையும் மனைவியையும் அழைத்துச் சென்று ஒரு இடத்தில் உட்கார வைத்தார்.

விழா தொடங்குவதாக இருந்த நேரத்திற்கு ஒரு அரை மணித்தியாலம் கழித்துப் பேச்சாளர்கள் ஒவ்வொருவராய்

## "கல்கி" என்ற பெயரின் விளக்கம் என்ன?

அமரர், பேராசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் 'கல்கி' என்ற புனை பெயரின் விள்க்கம் அநேகமானோருக்குத் தெரியாது. அவரிடம் கேட்டால் "ஏதோ புதுமையாக ஒரு பெயரை வைத்துக் கொண்டேன் அவ்வளவுதான்'! என்பாராம்!

ஆனால், "கல்கி"யின் காலத்திலேயே பிரபல தமிழக சஞ்சிகை ஒன்று இது பற்றி கீழ்க்காணும் விதமாக விளக்கம் அளித்திருந்தது. அதைக் கல்கியே மறுத்துரைத்ததாகவும் தெரியவில்லை அப்போது. அந்த விளக்கம் சரியானது என்றே நம்பத்தகுந்ததாகவும் இருக்கின்றது.

ரா.கி, தேனீ, தமிழ் தும்பி முதலிய புனை பெயர்களில் எழுதிக் கொண்டிருந்த இவருக்கு, கல்வி கேள்விகளிற் சிறந்த கல்யாணி அம்மை என்பார் வாழ்க்கைத் துணைவியாக வாய்க்கப் பெற்றார். அன்றிலிருந்து தமது கணவனின் இலக்கியப் பணிக்கு உந்து சக்தியாக உடனிருந்து உதவினாராம் அம்மையார்.

சில ஆக்கங்களைக் கணவன் தொடர்ந்து விட, அதனை வழுவேதுமின்றி முடித்து வைப்பாராம் அம்மையார். இதனால் தமது துணைவியார்பால் கொண்டிருந்த அன்பின் அடையாளமாகவே "கல்யாணி" என்பதன் முதலிரு எழுத்துக்களோடு, தமது பெயரின் முதல் எழுத்தான 'கி'யையும் சேர்த்து "கல்கி" என்று தமக்கும், தாம் ஆரம்பித்த சஞ்சிகைக்கும் சூட்டிக் கொண்டாராம்.

இதன் பின்னரே 'கல்கி' நாமம் இலக்கிய உலகின் உச்சஸ்தானத்தில் ஒளி விரித்து நின்றதாம்.

— கதிர்மாணிக்கம்.

வந்திறங்கினர். விழா வைப்பதற்கென ஒன்றியத்துக்கு நன்கொடை கொடுத்து உதவிய வர்த்தகப் பெருமக்களும் பேச்சாளர்களாக வந்திருந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களுமாய் விழா தொடங்கியபோது மேடை நிரம்பி வழிந்தது. ஆனாலும் பார்வையாளர் மண்டபத்தில் கூட்டம் மிகக் குறைவு என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஒன்றியத் தலைவர் உபாத்தியாயருக்கு மாலை அணிவிக்க, ஒரு சிறுமி அவர் மனைவிக்குப் பூச்செண்டு வழங்கச் சம்பிரதாய பூர்வமாகத் தேவாரத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

பேச்சாளர்கள் ஒவ்வொருவராய் எழுந்து நின்றனர். அவர் ஒரு ஜனரஞ்சக எழுத்தாளர் என்றார் ஒருவர். அவர் விரசம் இன்றி எழுதுவதே ஒரு அழகென்றார் இன்னொருவர். அவர் கதைகளைப் படிப்பது ஒரு சுகானுபவம் என்றார் வேறொருவர். எழுந்து பேசிய எல்லாருமே, உபாத்தியாயரின் இலக்கியச் சேவையை ஆனையடா குதிரையடா என்று வானளாவப் புகழ்ந்தார்கள். இப்புகழுரைகளில் ஒரு கணம் லயித்து உபாத்தியாயர் கிறங்கித்தான் போய்விட்டார். ஒரு சாமான்ய நிலையில் இருந்து எழுதியவரை இந்தப் பெரிய பெரியவர்கள் எல்லாம் இப்படிப் புகழ்ந்தால்...... மீனாட்சிக்கு உடல் ஒருமுறை சிலிர்த்து ஓய்ந்தது. சில பேச்சாளர்களின் பாராட்டுக்கள் வெறும் அபத்தமாக உபாத்தியாயருக்கே தோன்றிய போதும் கூட, எல்லாரது பேச்சுக்களும் முடியும் வரை அவர் மௌனமாகவே உட்கார்ந்திருந்தார். ஊரின் முக்கிய புள்ளியான ஒரு வர்த்தகர் அவருக்குப் பொன்னாடை போர்த்தி 'இலக்கிய மன்னன்' என்ற பட்டத்தையும் அளித்தார்.

இறுதியாக அவரைப் பேசச் சொல்லி அழைத்த போதுதான் தனது தீட்சண்யமான பார்வையை ஒருமுறை எல்லாப் பேச்சாளர்கள் மீதும் லாவகமாகத் திருப்பிவிட்டு எழுந்த உபர்த்தியர்யர் வெகு அடக்கத்துடன் இரண்டு வார்த்தை சொல்லிவிட்டு அமர்ந்து கொண்டார். மேடையை விட்டு இறங்கும் போது தனது கணவருக்கு ஒரு தனிக் காம்பீர்யம் வந்திருப்பதை மீனாட்சி அவதானித்தாள்.

இரவு ஒன்பது மணிக்கு மேல், விழா முடிந்த பிறகு, விழா மண்டபத்திற்கு முன்புறம் வந்து பஸ்ஸுக்காக காத்திருக்கிறார்கள் உபாத்தியாயரும் மனைவியும். திடீரென வானம் கறுத்து, மேகம் பிளந்து விட்டது போல் மழை கொட்டு கொட்டென்று கொட்டுகிறது. பேச்சாளப் பேராசிரியர்களதும் வர்த்தகப் பிரமுகர்களினதும் கார்கள் ஒவ்வொன்றாக உபாத்தியாயரைக் கடந்து வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன். தங்களால் புகழப்பட்டவர் அப்படி நனைவதைப் பார்ப்பதும் ஒரு குரூர ரசனைதானோ? உபாத்தியாயரும் மீனாட்சியும் கிளர்ந்தெழும் உள்ளக் குமுறல்களைச் சுதாரித்துக் கொண்டு மழையில் நனைந்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியவர்கள் பேசிய பேச்சுக்களும் புகழுரைகளும் பேசியவர் பெயருடன் அடுத்த நாளையப் பத்திரிகைகளில் வெளிவரும். ஆனால்...... மழையில் நனைந்து கொண்டிருக்கும் உபாத்தியாயரைக் காரில் ஏற்றிச் சென்றது பற்றியோ, ஏற்றிச் செல்லாதது பற்றியோ, பத்திரிகையில் வரப்போகிறதா என்ன? வேறு வேலை இல்லை... போங்கள்!

(யாவும் கற்பனை)

## பலநாட்டுப் பழமொழிகள்

★ மனிதனுடைய பேச்சுத்தான் அவன் எண்ணங்களை வெளிப்படுத்தும் கண்ணாடி. — சினப் பழமொழி

★ அறிவை வளர், வயிற்றைக்குறை, நாக்கைக் கட்டுப் படுத்து. — இத்தாலிய பழமொழி

★ கதவைத் தட்டாத காரணத்தால் எத்தனையோ நல்ல வாய்ப்புக்களை இழக்கின்றோம். — பல்கேரிய பழமொழி

★ ஆயிரம் முறை சிந்தனை செய், ஆனால் ஒருமுறை முடிவெடு. — துருக்கிய பழமொழி

★ கவலையால் மனிதன் இறப்பதில்லை, உலர்ந்து சருகாவான். — ருஷ்ய பழமொழி

★ திருப்தியுள்ள மனமே நல்ல மருந்து. — ஆங்கிலப் பழமொழி

★ வறுமையைப் பார்த்து சிரிக்கின்றவன் அதைத் தன் பக்கம் இழுக்கின்றான். — ஆபிரிக்கப் பழமொழி

★ ஒவ்வொரு முடியாக விழுந்துதான் தலை வழுக்கை ஆகிறது. — வேல்ஸ் பழமொழி

★ ஆற்றைக் கடப்பதற்கு முன்னால் முதலையுடன் பகைக்காதே. — அமெரிக்க பழமொழி

★ பழக்கத்திற்கு மாறுபட்டதைச் செய்தாலும், இயற்கைக்கு மாறுபட்டதைச் செய்யாதே. — கிரீக் பழமொழி

★ இறப்பது என்பது ஒவ்வொருவரும் கட்டாயம் கொடுத்தே தீரவேண்டிய தவிர்க்கமுடியாத கடன். — ஜப்பானிய பழமொழி

★ பேய் செய்ய முடியாததைப் பெண்ணால் செய்ய முடியும். — ஜெர்மனிய பழமொழி

★ ஒரு வழக்கு மற்றொரு வழக்கை ஈன்று விடும். — லத்தீன் பழமொழி

தொகுப்பு:— ச. ஐயாத்துரை

# நால்வர் நவின்றவை

## காவலூரான்

### இங்கு ஒரு கேள்விக்கு நான்கு தமிழ் கலைஞர்கள் பதிலளிக்கிருர்கள்

**கேள்வி: கலை, இலக்கியத்துறையில் உங்களது பங்களிப்பு என்ன?**

கீழ்கரவை — பொன்னையன்:—

“தமிழ் கலைத்துறைக்கு கலைஞர்களின் தேவை அவசியமென ஏற்படும் காலத்தில் கலைத்துறையில் எனது காலை எடுத்து வைத்து நுழையவில்லை. எனது அடங்காத ஆசைதான கலைத்துறையில் என்னை நுழைய வைத்தது. 1960ம் ஆண்டுதான் கலைப்பாலத்தில் காலடி எடுத்து வைத்தேன். ஆரம்பம் வெறும் நடிப்பு அதுவும் ஓர் ஆசையால் எழுந்த அவசரத்துக்கான உணர்ச்சித்துடிப்புகளை நடிப்பென்று எண்ணினேன். வெளியுலக கலைத்துறையில் நுழைந்தபோதுதான் எனது கலையில் உணர்வை உணர்ந்து நடிக்க முயன்றேன் எனலாம். கரவை வள்ளுவர் மன்றமே எனது கலைத்தாயகம். கரவை அருளானந்தமே எனது கலைத்தெய்வம்—குரு

முதன்முதலாக “சங்கரர்” என்னும் நாடகத்தில் எனது நடிப்பைத் தொடங்கி 40 நாடகங்களுக்கு மேலாக நடித்துவிட்டேன். 40 நாடகங்கள் எனது கலைத்துவ வாழ்க்கையில் குறுகிய நாடகமாக இருக்கலாம். ஆனல், அவைகள் ஒவ்வொன்றும் ஏறிய மேடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை பெருமையுடையது. நாடகங்களின் எண்ணிக்கை கூட வேண்டும் என்பது எனது எண்ணமல்ல. நாடகத்தின் எண்ணங்கள் நன்ருக, சீராக அமைய வேண்டுமென்பதில் கருத்துக் கொண்டிருக்கின்றேன்.



கீழ்கரவை பொன்னையன்



வ. கந்தசாமி

வ. கந்தசாமி:—

கதை, உரையாடல், பாடல் என்பன எழுதுதல், பாடுதல், நடித்தல, நெறிப்படுத்துதல் ஆகிய துறைகளிலே கடந்த இருபது வருடங்களாகச் செயற்பட்டு வருகின்றேன்.

எமது பின்தங்கிய வரணிக் கிராமத்திலே— 1. முதன் முதலிலே நாடக மன்றம் ஒன்றினை ஆரம்பித்தேன். 2. புராண இதிகாச நாடகங்களையே கண்டுவந்த எம் கிராமத்துக்கு பல எதிர்ப்புகளுக்கிடையே ‘ஒன்றிய உள்ளம்’ என்னும சமூக சீர்திருத்த நாடகத்தை முதன் முதலில் அரங்கேற்றினேன். 3. பெண்பாத்திரத்திற்கு பெண்களே நடிப்பதையும் முதன்முதலிற் காட்டினேன். 4. காளலய நாடகத்தையும் அறிமுகப்படுத்தினேன் 5. போட்டிகளிற் கலந்து வரணிக்குப் பெருமை தேடித்தந்ததும் எமது மன்றமே.

பாடசாலைகளிலும் நாடகங்களை அரங்கேற்றியுள்ளேன்.

பல பாத்திரங்களிலும் நடித்துவரும் நான் ஆரம்பத்திற் கதாநாயகியாகவே நடித்தேன்.

வானெலி நாடகங்களிலும் அவ்வப்போது குரல் கொடுத்துள்ளேன்.

பி. கே. கருப்பையா:—

1968ம் ஆண்டு “தினபதி தினமொரு சிறுகதை” மூலம் எழுத்துலகுக்கு அறிமுக

மானேன். ஆரம்பத்தில் எந்தவித இலட்சியத்துடனும் எழுதத் துவங்கவில்லை. ஆனால் எனது முதலாவது கதை பிரசுரமானபின், மலையக மக்களின் அவல நிலையை சித்திரிக்கும் கதைகளை எழுத வேண்டும் என எண்ணினேன். பலவித பிரசுர கஷ்டங்களுக்குள்ளும் எழுதிக் குவித்துவிட்டேன் என்று சொல்ல முடியாவிட்டாலும் கடந்த தசாப்த காலத்துக்குள் பல சிறுகதைகள், அனுபவக் கட்டுரைகள் எழுதியுள்ளேன். ஆரம்பத்தில் பி. கே. கருப்பையா என்ற என் சொந்தப்பெயரிலும், பின்னர் "கி. முகிலன்", "கங்குலன்", "மலைவாசி" ஆகிய புனைபெயர்களிலும் எழுதியுள்ளேன்.

மலையக இலக்கிய வளர்ச்சிக்கு என்னால் இயன்ற பணிகளை செய்துள்ளேன். கதைக் கனிகள் நாமிருக்கும் நாடே, தோட்டக் காட்டினிலே, ஒரு கூடைக் கொழுந்து ஆகிய தொகுதிகள் வெளி வந்ததிற்கு ஆக்க பூர்வமான முயற்சிகளில் எனக்கும் நிறைய பங்கு உண்டு என்பதை கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.



பி. கே. கருப்பையா — அ. நற்குணசேகரன்

அ. நற்குணசேகரன்:—

எனது ஒன்பதாம் பருவத்தில் நாடக மூலம். கலை உலகில் நுழைந்தேன், இல்லை நுழைக்கப்பட்டேன். மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் போது தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதே நேரத்தில் கலையரசு சொர்ணலிங்கம், திரு. S. T. சாறி, திரு. ரி. செல்வரட்ணம் ஆகியோரின் ஆசீர்வாதமும் ஊக்கமும் என்னை கலை உலகில் மேலும் ஈடுபட தூண்டியது.

1948ம் ஆண்டில் இருந்து நான் நாடக உலகில் ஈடுபட்டு நடிப்பது மல்லாமல் பல நாடகங்களை இயக்கியும் வருகின்றேன். நான் மட்டும் சிறந்த நடிகனாக வந்துவிட்டால் போதாது. என்னை விட சிறந்த பல நடிகர்கள் உருவாக வேண்டும் என்பதே எனது அவா. இந்த அவாவினை நிறைவேற்றும் நோக்குடன் பல நாடக மன்றங்களை அமைத்தேன். இதில் இன்றும் நிலையாக சுதுமலை மக்கள் நாடக மன்றம் திகழ்கிறது. இறுதியாக அகில இலங்கை நாடக கலைஞர் பேரவை உருவாக்குவதில் முன் நின்று அதன் மூலம் கலைத்தாய்க்கு சேவை செய்யும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.


இதுவரை 87 நாடகங்களை நடித்தும் இயக்கியும் இருக்கின்றேன்.

## ஈழவேந்தனின் தாயார் கொடுத்த சூடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் அபிமானிகள் பலரும் எதுவிதமான காரணமுமின்றி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். விசாரணையின் பின்னர் அவர்கள் மீது எதுவித குற்றச்சாட்டுகளையும் சுமத்த முடியாது போகவே அவர்களிற் பலர் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வாறாக விடுதலை செய்யப்பட்டவர்களில் திரு. ஈழவேந்தன அவர்களும் ஒருவர் என்பது நாடறிந்த விடயமாகும்.

திரு. ஈழவேந்தன் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவரைப் பார்க்க அவரது தாயார் அவரது பாரியார் மற்றும் நெருங்கிய இரத்த உறவினர்களுந்தான் அனுமதிக்கப்பட்டனர். ஈழவேந்தனின் அன்னையார் நன்கு கல்வி கற்றவர். சரளமாக ஆங்கிலத்தில் உரையாடும் ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர். ஒருநாள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஈழவேந்தன் அவர்களைப் பார்க்கச் சென்ற அவரது அன்னையாரிடம் ஒரு இராணுவ உயர் அதிகாரி உரையாடிக் கொண்டிருந்தபோது, "தாயே! நீங்கள் நன்கு கல்வி கற்ற பெண்மணிபோல் தோன்றுகின்றதே அப்படியிருக்க, உங்களுடைய மகனை நீங்கள் ஏன்தான் இப்படியான இயக்கங்களில் ஈடுபட அனுமதித்தீர்கள்?" என்று கேட்டாராம். உடனே ஈழவேந்தனின் தாயார் அந்த இராணுவ அதிகாரியைப் பார்த்து, "நான் கல்வி கற்று இருக்கிறபடியால்தான் எமது இனத்தின் இழிநிலையை உணர்ந்து, விடுதலை இயக்கத்தில் ஈடுபட எனது மகனுக்கு ஊக்க மளிக்கக்கூடியதாக விருந்தது" என்று சட்டெனப் பதிலடி கொடுத்தாராம். இதைக் கேட்டு திருதிருவென முழித்த இராணுவ அதிகாரி, "எந்த மூலை முடுக்கில் போய்ப் பார்த்தாலும் ஈழம் பற்றித்தான் கதைக்கிறார்களே தவிர தேசிய ஒற்றுமை பற்றி வாய்திறந்து கூறுவார் ஒருவரையும் காணோமே" என அசடு வழியக் கூறினாராம்.

தகவல் :— பொன். பூலோகசிங்கம்.



# வரட்டுக் கௌரவங்கள்

புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

'மகிழூர் வரவேற்கிறது!'

நெஞ்சம் நிறைந்த துயருடன் 'பஸ்'ஸை விட்டிறங்கியபோது; கிராமத்தின் எல்லையில் புதிதாய் நாட்டப்பட்டிருந்த அந்த எல்லைப் பலகையே முதலில் என் கண்களில் திரையிட்டது!

அக்கா எனக்கடித்த அந்தத் தந்தியை மீண்டும் ஓர் முறை எடுத்துப்பார்க்கிறேன். கண்களிலிருந்து பனித்த நீர்த் துளியொன்று தந்தியிற் பட்டுத் தெறிப்பதை மட்டுமென்னால் உணரமுடிகிறது!

திரும்பிப் பார்க்கிறேன். சதா மலர்ந்த முகத்துடன் மிளிரும் என் தனவதி, பொலிவிழந்த 'அந்த' முகத்தால் பரிதாபமாய் என்னை நோக்குகிறாள். அவள் கையில் 'சூட்கேசை'த் தூக்கிக் கொண்டு மறுகையால் இரு பிள்ளைகளையுந் தாங்கியவாறு முன்னேறுமாறு தன் முகத்தால் சைகை தருகிறாள்.

என் கால்கள்...........முன்னேறுகின்றன. பத்து வருஷங்கள்! நினைக்கவே நெஞ்சு நெகிழ்கிறது. பெற்ற தாயையும் பிறந்தவூரையும் பிரிந்து இத்தனை காலங்களை எப்படித்தான் கழித்தேனோ?

அம்மா இறந்த இந்தச் செய்தியைக்கூட எனக்கு அறிவிக்க முடியாதளவிற்கு ஐயா இன்னமும் அதே வரட்டு கௌரவத்துடன்தான் இருக்கிறாரா? சீ! என்னால் அந்த மனுசனைப்புரிந்து கொள்ளவே முடியவில்லை! 'பூசாரியார்' எனப் புகழ் பெற்ற ஊர்த் தெய்வங்கட்கெல்லாம் விளக்கு வைத்துதிரியும் ஐயா; என்னால்.........தனக்குகோவில் குருக்களளித்த பூசாரி பதவியும், ஊரவர் வைத்த பூசாரியார் பட்டமும் மட்டப்பட்டு விடுமென கவலைப்படுகிறாரோ? ஏன்தான் அவரிற்கிந்த வரட்டுக் கௌரவமோ?

பத்து வருஷங்கட்கு முன்பு நடைபெற்ற அந்தச் சம்பவம் திரைப்படம் போல் என்நெஞ்சில் திரையிடுகிறது.

எழுது வினைஞராக முதன் முதலில் நான் அந்தக் காரியாலயத்திற்குச் சென்ற தருணத்தில்தான் தட்டெழுத்தாளர் வரிசையிலிருந்த தனவதியை இனங் காணமுடிந்தது. முன்பின் அறிமுகமில்லாத ஆடவர்களுடன்கூட நாகரீகம் என்ற போர்வையிலே பழகும் இன்றைய பெண் உத்தியோகத்தர் மத்தியில் தனவதியிடம் குடிகொண்டிருந்த அந்த 'தனியான' சுபாவமே என்னை மிகவுங்கவர்ந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளாக ஒட்டியுறவாடிய பெற்றவரை, உற்றவரை, விட்டு நீண்ட தூரங்கட்கப்பால் புதுவூரில் பிரவேசித்த அந்தச் சமயத்தில் இருள் குடிகொண்ட என் மனதிற்கு தனவதியின் பேச்சும் பழக்கமும் 'புத்தொளி'யாயமைந்தது:கந்தோ

## காந்திஜியின் நகைச்சுவை

"ஊருக்கெல்லாம் அகிம்சையைப் போதிக்கிறீர். ஆனால் நேரு மாத்திரம் தடியடிப்பிரயோகம் செய்தால் வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் ஒரு நச்சுப்பாம்பு" இவ்வாறு முதிய தொண்டர் ஒருவர் காந்தியைக் குற்றம் சாட்டினார்.

"நீங்கள் கூறியதைப்போல நச்சுப்பாம்பாக இருக்கலாம். ஆனால் இப்பாம்புக்கு பல்லில்லை. இது தெரியாதா?" என்று கேட்ட காந்தி பொக்கை வாயால் சிரித்துக் காட்டினார்.

சு. முரளிதரன்.

ரில் ஓய்வு நேரங்களிலெல்லாம் தனவதியின் உதவியே என்கதியானது. இலக்கியத்தில் இருவருக்கும் இருந்த நாட்டம் ஒருவரையொருவர் புரிந்து உரிமையுடன் பழக ஆரம்பித்த அந்தச் சமயத்தில் தான் ‘செயமன்’வரை எங்கள் விஷயம் எட்டியது. இருவரையுந் தனதறைக்கு அழைத்து அவர் அளித்த அந்த ‘அட்வைஸ்’ன் விளைவு......! ‘தனம்! நானுன்னை கல்யாணஞ் செய்யிறதா முடிவு செய்திருக்கிறன்.’—நானே முதலில் விஷயத்தைக் கூறினேன்.

ஏளனச் சிரிப்புதிர கூறினாள். யாழ்ப்பாணத்திலே உள்ள கிராமமொன்றிலே தாழ்த்தப்பட்டசாதியில்தான் பிறந்தவளாம். ஏழைக்குடும்பமொன்றிலே ஏழு பெண்களுக்கு மூத்தவளாம் தான். தனக்கென்று வீட்டில் காணி பூமி நகை நட்டு எதுவுமேயில்லையாம்.

கல்யாணப் பேச்செடுத்ததுமே சாதி சமயம்; சீதன வாகனமென ஆதிஅந்தங்களை ஆராய்ந்து பார்க்கும் எமது மண்ணிற்கேயுரித்தான பாரம்பரியம் என்தனவதியிடம் குடிகொண்டிருந்ததில் வியப்பேதுமில்லைத்தான்!

“சாதி சமயமென்ற பேதங்களிற்கு அப்பாற்பட்டவன் நானென்பதைப் புரிந்துமா தனம்.........நீ இப்படி?”

“நீங்கள் என்னையேற்கத் தயாராயிருக்கலாம். ஆனால் உங்க குடும்பம் இதை வரவேற்குமா?............உங்க இனசனந்தான் இதற்கு சம்மதிப்பார்களா?”

“ஊரிலை தாழ்த்தப்பட்ட சனங்கள் கோவிலுக்கை உள்ளடவிரும்பியபோது.... அவையளுக்கு ஒத்தாசை புரிந்து அவர்களைக் கோவிலுக்குள் உள்ளடுத்தியவர் என்னுடைய ஐயா.நானுன்னைக் கலியாணஞ் செய்யிறதை......அவர் போற்றுவாரே தவிர ஒரு நாளும் ஏற்காமல் விடமாட்டார்.” — ஐயாவின் ‘எழுச்சி’யை நம்பி நான்தான் பெருமையடித்தேன். அப்படி மனம்விட்டுச் சொன்ன எனக்கா......... இந்தக் கதி?

முதன் முதலாக தனவதியுடன் நான் வீட்டிற்குச் சென்றபோது பூனையாயிருந்து யாவற்றையுமறிந்து விட்டு ஐயா புலியாக.. ......மாறினார்.

“உனக்கென்ன தைரியமிருந்து எனக்கொருசொல்லு சொல்லாமல் உவளையுங் கூட்டிக் கொண்டு இஞ்சை வந்திருப்பாய்......போடா வெளியாலை”

“ஐ.........ஐயா!”

“குடும்ப நிலவரமறியாமல் நீர் கண்டவளையுங் கூட்டிக் கொண்டு வந்து தங்க இதென்ன தங்குமடமா......?”

“நடந்தது நடந்துபோச்சு அதுக்கு இப்பேன் நாண்டு கொண்டு நிக்கிறியள்”-அம்மா முற்றத்தில் இறங்கி நின்றா.

“என்னடி நீ பூராயம் பிடிக்கிறாய்? எங்கட அந்தஸ்தென்ன? அவளின்ரை நிலவரமென்ன? குலங் கோத்திரமெண்டு ஒரு இழவும் பாராமல் கூட்டிக் கொண்டு வாறதே?”

“என்ன கண்டறியாத குலங் கோத்திரம்...... உங்கை எல்லாரும் மனுசர்தானேயெண்டு சொல்லித்தானே...... வடலித்திடலாரை முருகையன் கோயிலுக்கை உள்ளடுத்த மும்முரமா நிண்டனிங்கள் அந்த நேரமெல்லாம் இப்ப எங்க போயிட்டுது.”

“எடீ அதுகோயில்.........”

“அப்ப உங்கடை முகாந்திரங்களெல்லாம் கோயில் குளத்தோடைதானே”— அம்மாவின் அக்குரல் ஓயமுன்பே ஓங்கிவந்த ஐயாவின் கைகள் அவவைப்பதம் பார்க்கின்றன.

முற்றத்து முருங்கையில்கொழுவியிருந்த சத்தகத் தடியை எடுத்தவாறே அவர் சத்தமிடுகிறார்............“இண்டு மேற்பட்டு நீ எனக்கு மகனுமில்லை! நான் உனக்கு அப்பனுமில்லை! நான் செத்தாப் போலை.........”—அவரதுவரட்டுக் கௌரவம் முரட்டுப் பிடிவாதமாய் வடிவெடுத்துஎன்னை வெளியேற்றவே வேண்டுமென்று வைராக்கியமான பின்பு அவருடன் நான் என்ன கதைப்பது.........? எதைக்கூறுவது?

“அப்பா!”

—என் பின்னே வரும் மகள் என்னை அழைக்கிறாள். அவளுடன் மழலை கொஞ்சி விளையாடும் நிலையிலா நானிப்போ இருக்கிறேன்?

பற்றை பற்றி பனை மரங்களினூடாக முருகையன் கோவில் இராஜகோபுரம் என் கண்களில் திரையிடுகிறது. பத்து வருஷத்தே நிகழ்ந்த என் கிராமப் பருவப்பூரிப்பு

## தமிழ் மாணவன்

‘வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு’ என்று பாரதியார் பாடிய பாடலுக்கு அர்த்தம் உண்டாக்கியவர் ஒரு ஆங்கிலேய அறிஞர். ஜி. யூ போப் என்ற அந்த அறிஞரே திருக்குறளை ஆங்கில மொழியில் பெயர்த்தவர்.

அந்த அறிஞர் இறக்க முன்னர் சொல்லிவிட்டு இறந்தது என்ன தெரியுமா? தனது கல்லறையில் “ஒரு தமிழ் மாணவன்” என்று எழுதவேண்டும் என்பதே அவர் சொன்ன வார்த்தை!

—விவேகானந்த ஜீவியம் நூலிலிருந்து

விக்னேஸ்வரன்,

பளிச்சிடுகிறது! சிறு பராயத்திலே கூட்டாளிமாருடன் கூடி நான் கிளித்தட்டு விளையாடிய வளமற்ற நிலத்தில் மாபெருந்தொழிற்பேட்டை. எதிரே தொடரமைப்பில் வீடுகள். முருகையன் கோவில் முழுக்கவே மாறிவிட்டது! நீல வானம்வரை நீண்டு நிமிர்ந்து காற்றில் சலசலத்த மகிழ் தருக்கள் நின்ற இடத்தே...... சீனப் பெருஞ்சுவரை விஞ்சிய தேர்முட்டி. அதனுள் அழகிய தேர்!

தேரோட்டத்தை ஒத்தே மனித வாழ்வும் என்பதை சதா நினைவுறுத்தவா இப்படிக் கோவில்கள் தோறும் தேரை நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

கல்லூரிவீதிக்கு வந்துவிட்டேன். கொட்டிலுங் குடிலுமாயிருந்த பள்ளி இன்று மாடகூடங்களுடன் கூடிய கல்லூரியாகக்காட்சி தருகிறது. அன்று மணல் ஒழுங்கை......... இன்று கல்லூரி வீதி! தூரத்தே... :... என் வீட்டு வாசலில் பலர் குழுமியிருப்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. என்னையே யறியாது நெஞ்சம் விம்ம கண்களில் நீர் கரைகின்றன.

"நான் செத்தாப் போலை கொள்ளிவைக்கிற உருத்துக் கூட உனக்கில்லை! — எண்டு அண்டைக்கு உங்கட ஐயா சொன்னாரே அதை............;" மீதியை சொல்லவும் முடியாது மெல்லவும் முடியாது தனவதி தவிப்பதை என்னால் நன்குணர முடிகிறது!

கிராமம் என்ற கற்பழிந்து மகிழூரே இன்று நாகரீக நகராக காட்சி தருகையிலே...... 'அவள்' பெற்ற ஐயா மட்டும் மாறுமலா போயிடப் போகிறார்.

அம்மாவின் இந்த சாவிற்கு அவவுடைய இருதய நோய் தான் காரணமாயிருக்கும். நோயாளியெண்டும் கவனிக்காமல் ஓயாத வேலை! அப்பிடி அவிச்சுக் கொட்டித்தான் என்னத்தைக் கண்டுட்டா? கடன் தனிக் கவலைகள் ஒரு புறம்! என்ரை சிந்தனை இன்னொரு புறம்! எல்லாம் ஒரு மிக்கச் சேர்ந்து தாரைவார்த்துப்போட்டுது. அக்கா குடும்பத்துடன் கரைச்சிக்கு குடியேறியபிறகு தங்கைச்சி தானே தனிய அவவிற்குத் துணையாயிருந்தவள். அப்ப அவளுக்கு பன்னிரண்டு பதின்மூண்டு வயது......இப்ப அவள் பெரிய குமரியாகியிருப்பாள்!

வீட்டுப்படலை கிட்டிவிட்டது. ஏனோ என் சதுரம் நடுங்க ஆரம்பிக்கிறது. கால்கள் தள்ளாடுகின்றன! மீண்டும் கண்கள் கரைகின்றன. வீட்டுப் படலையைத் தாண்டி முற்றத்தில் காலடி வைக்கிறேன்.

"ஐயோ! ராசா நீ வந்து சேந்திட்டியோடா! எங்களைப் பெத்த தெய்வம்............" — அம்மாவின் தலைமாட்டிலிருந்த அக்கா ஓடி வந்து என் காலடியில் விழுகின்றா. தொடர்ந்து சின்னம்மா...... பொங்கி வந்த துயரத்தை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! என்னையேயறியாமல் நான் அவர்கள்மேல் விழுகின்றேன் 'அம்மா...என்ரை அம்மா...".

அழுகுரல்கள் ஓய்ந்தன!

"ஒருதரும் இஞ்சை வரத் தேள்வையில்லை! கொள்ளி வைக்க ஏன் நானிருக்கிறேன்' நான் வடிவா வைச்சு முடிப்பன்"—அப்போதுதான் எங்கிருந்தோ வந்த ஐயா சற்றுச் சத்தமாகச் சொன்னார். அவர் பின் ஆவேசத்துடன் அவரது ஒன்றுவிட்டசகோதரி லட்சுமியின் கணவர் சந்திரசேகர் நிற்கிறார்!

"அம்மா சொல்லைக்கை பேசாமல் நிண்டுட்டு இப்பென்ன சமாவைக்கிறியள்"— அழுது களைத்திருந்தாலும் அக்கா மூச்சுவிடாது மொழிந்தாள்.

"என்ன......என்ன சொன்னவ!"—ஐயா கடாவினார்.

"தான் செத்தாப்போலை தனக்கு மோன்தான் கொள்ளி

## காந்திஜியின் நகைச்சுவை

ஏழைகள்மீது அன்பு கொண்ட காந்தி அவர் களைப்போல் சட்டை அணியாமலிருந்தார். இதைக் கண்ட மாணவனொருவன் "அம்மாவிடம் சொல்லி ஒரு சட்டை வாங்கித்தருகிறேன் அணிந்து கொள்கிறீர்களா?" என்றான்.

அதற்கு காந்தி "என்னோடு சேர்ந்து நாற்பது கோடிசகோதரர்களிருக்கிறார்கள். அவர்களுக்கும் அம்மாவிடம்சொல்லி சட்டைகள் வாங்கித் தருகிறாயா! என்றுகேட்டார்

சிறுவனிடம் அசடுவழிந்ததுதான் மிச்சம்.

சு.முரளிதரன்.

## சிரிப்பு!

ஒருவர்:- எனக்கு கப்பல் வாழைப்பழத்தில் நல்ல பிடிப்பு.

மற்றவர்:- எனக்கு மோதகத்தில் நல்ல பிடிப்பு.

மூன்றமவர்:- உங்களுக்கு வாழைப்பழம்—மோதகம் என்பவற்றில் அதிகபிடிப்பு எனக்கு அவற்றில் பிடிப்பில்லை, ஆக நாரியுக்கை தான் ஒரே பிடிப்பாக இருக்கு.

அனுப்பியவர்
—த. நாகேஸ்வரன்.
சாவகச்சேரி.

வைக்கவேண்டுமெண்டு சீவன் போகேக்குள்ளை அந்த மனுசி மண்டாடினதெல்லே?"

ஒப்பாரிக் குரல்கள் ஓய்கின்றன. கட்டியணைத்து அழுத பெண்டுகள் எட்ட விலகிக் குந்துகின்றனர்.

"சந்திரசேகரி என்ன பாத்துக் கொண்டு நிக்கிறாய்? ஆக்களை.... வெளியிலை அனுப்பு—" சாகப் போகின்ற வயதிலும் தந்தையார் தனது சாகாத வரட்டுக் கௌரவத்தால் சத்தமிடவே — குடுமிக்கார அம்மான் தனது குடுமியை ஓர் முறை உலுப்பி முடிந்து கொண்டே தனது கடமையிலீடுபட முனைகின்றார்! அரவமறிந்து அலுவலுடன் நின்ற லட்சுமி மாமி ஓடி வந்து விடுப்புப் பார்க்கிறா!

"அம்மான் சும்மாயிருங்கோ! அவனை வரச்சொல்லி நான்தான் தந்தியடிச்சனான்." —அக்காவின் ஓலமிது!

"ஓகோண்டானும் அதுவும் உம்முடைய முகாந்திரமோ?"

செத்த வீட்டிற்கு வருவோரையறிவிக்க பறை விட்டு விட்டு ஒலித்தது! இடையே அழுகுரல்களும் ஒலிக்கின்றன!

"அம்மா அம்மா...இஞ்சை என்ரை நிலையைப் பாரமமா, நீ விட்டுவிட்டுப் போட்டாய்... இஞ்சை நான் படுகிற பாட்டைக் கொஞ்சம் கண் திறந்து பாரம்மா"—அம்மாவின் தலைமாட்டில் விழுந்து நான் புரளுகிறேன். தனவதியும் பிள்ளைகளும் என்னருகே விழுந்து அழுகிறார்கள்! அம்மா......நிம்மதியாக உறங்குகின்றா! அவவிற்குத்தான் இந்த நரகத்திலிருந்து விடுதலை கிடைத்து விட்டதே!

கொள்ளி வைப்பது யாரென்ற பிரச்சினை குருக்கள் பகுதியிலும் ஏற்பட்டிருக்க வேண்டும்! 'ஏன் பொடியன் தானே வரச்சொல்லுங்கோவன்;—மூத்தம்மான் சத்தமாகச் சொல்கிறார். தனது உடன் பிறந்தவளின் இறுதி எண்ணமாவது நிறைவேற வேண்டுமே என்ற அவா அவரிற்கு.

"என்ன பரமு? புதுநாணயக்கதை பறையிறாய்? அது மச்சானல்லோ கிருத்தியத்துக்கு நிக்கிறது"—சந்திரசேகரியம்மான் அடிக் குரலெடுத்தார்.

'ம்...ம்... கிருத்தியத்துக்கு நிக்கிறாள் தோஞ்சு வெள்ளை வேட்டி கட்டிவரவேணும்'' குருக்கள் இயங்க ஆரம்பித்து விட்டார். கும்பங்களைப் பரப்பி சுள்ளிகளால் சுவாலையினையெழுப்பி ஓமம் வளர்க்கிறார் அவர். சுவாலை கொழுந்துவிட்டெரிகிறது!

ஐயாவை அழைத்துக் கொண்டு அம்மான் கிணற்றடிப்பக்கம் செல்கிறார். அப்போது...... "என்னக்கா செய்யுது?"

"ஒண்டுமில்லையடா! தலைக்கை ஒரே அம்மலாக் கிடக்கு.........மயக்கம் வாற மாதிரிக் கிடக்கு"—அக்காவின் சிவந்த முகம் இருண்டு கொண்டு வந்தது. கண்கள் பிரண்டன, பக்கத்து வளவு விசாலாட்சியக்கா கோப்பி கொண்டு வந்து தனவதியிடம் கொடுக்கின்றா.

"விசாலாட்சி என்ன விசர் வேலை பார்க்கிறாய்? அவளுக்கு கோப்பியை நீ பருக்கு" — அவசரஅவசரமாய் வந்த லட்சுமிமாமியின் குரலது. எதுவுமேவேண்டாமென்று அக்கா தனவதியிடம் சைகை காட்டுகின்றா.

"தங்கைச்சி..... எங்கே?"— அருகிலிருந்த சின்னம்மாவிடம் உஷாவினேன்.

"அவள் கலியாணங் கட்டி புருஷனோடை கிளிநொச்சியிலையடா. தந்தியடிச்சனாங்கள் இன்னுங் காணேலை."— கண்கள் கரைய சின்னம்மா புலம்பினா.

"குளிப்பாட்டுற பெண்டுகள் குடமெடுக்க வாருங்கோ" —அம்மான் என்னருகே வந்து நின்று கூறுகிறார். ஆதி அந்தங்கள் பார்க்கப்படுகின்றன. முதலில் லட்சுமி மாமியின் பெயர் கூறப்படுகிறது. மேலும் ஏதேதோ உறவுகள்... இருவர் தேர்வாகின்றனர்.

"சம்மந்த வழியிலை ஒருதரும் இல்லையே?" - பின் வளவுப்பொன்னம்மாக்காவின்குரலது. "அந்தச் சீரழிவுகளை ஏன் பொன்னம்மா இப்ப கேட்டு பரிசுகேடு படுத்துகிறாய்?"— வேட்டியை மடித்துக் கட்டியவாறே அம்மான் என்னைப் பார்த்துக் கறுவிவிட்டுமெள்ள நகருகிறார்.

"இவள் தெய்வி எங்கை... உங்கை? நிக்கிறீயே உனக்கு வடலித்திடலிலையிருந்து வர இவ்வளவு நேரமே......?சரிசரி போய் குளிப்பாட்டுற இடத்தெ ஒல்லுப் போலை தூப் பரவாக்கி விடு!...ம்...ம்...... விலத்துங்கோ குளிப்பாட்டசவத்தைத் தூக்கப் போறம்"—தனக்கு அளிக்கப்பட்ட 'கௌரவம்' காரணமாக லட்சுமிமாமி அவசரங் காட்டு

## "சட்டமும் கோடும்"

சட்டம் என்பது எவ்வளவு மகத்தான, நிலையற்ற தன்மை வாய்ந்தது; சட்டம் எப்பொழுது உண்டாக்கப்பட்டதோ; அந்தக் கணத்திலே அதிலிருந்து தப்புவிக்கும் முறையும் கண்டு பிடிக்கப் பட்டுவிட்டது என்பதையும் ஒவ்வொரு சட்டத்தை கூர்ந்து கவனித்தால் அதன் கீழ் ஒரு துவாரமிருக்குமென்ற உண்மையும் தெரியவரும் என்று "பிளாட்டன்" என்பவர் கூறியுள்ளார்.

அனுப்பியவர்
ச. ஐயாத்துரை.

கிரு. நான் விலகுகிறேன் அருகிலிருந்த தனவதியை அழைத்தவாறே அக்கா குளிப்பைாட்டும் இடத்திற்குச் செல்கின்ரு.

மேலும் ஏதேதோ சடங்குகள். யாவும் முடிகின்றன...

"பந்தம் பிடிக்கப் பேரப்பிள்ளையள் எல்லாரையுங் கூப்பிடுங்கோ" — ஐயாவின் மூத்தமைத்துனர் முருகேசர் சத்தமாகச் செல்லிய போது அக்காவின்ஒரே மகனை அழைத்தவாறே லட்சுமி மாமி வருகின்ரு.இரு பந்தங்களைக்காவிக்கொண்டு சின்னம்மா என்பிள்ளைகட்கருகில் வரும்போது... மச்சாள் என்ன வேலை பாக்கிருய்?"-பலாத்காரமாக பந்தங்கள் பதிக்கப்பட்டாலும் சின்னம்மா விடாப்பிடியாக என் பிள்ளைகளை அம்மாவின் தலைமாட்டில் வைத்திருக்கின்ரு.

"ம்.........இன்னும் என்ன அலுவல்?"—பந்தலில் ஆடிய தோரணங்களை விலத்தியவாறே ஐயா என்னருகே வந்து நின்ருர்.

"சவத்தைத் தூக்கப் போருரும்.வாய்க்கரிசி போடுற பெண்டுகள் ஒல்லுப் போலே எழும்புகிகோவன்! அதுசரி...... கந்தப்பு உவன் குட்டியன் சுடலைக்குப் போட்டானே?பாத்து ஆளை அனுப்பு.........வடலித்திடலாருக்கு மெல்லே இப்பவால் மூளச்சிட்டுது கண்டியோ?............. அவங்களைச் சொல்லி என்ன? எங்கடை பகுதியிலை சீலக்கேடு இருக்கைக்குள்ளை ஏன்.........?" —கௌரவத்துடன் அம்மான் கூறுகிருர். அவருக்கோ வலு உசாரி.

மாமனுரின் மரத்துப்போன வார்த்தைகளால் மௌனமாயிருந்த தனவதி மௌனத்தைக்கலைத்து ஏதோ முணுமுணுக்கின்ருள்.

"பொறப்பா சுடலைக்காவது போட்டுப் போவம்" — நான், சற்று ஆவேசத்துடன் கூறுகிறேன்; "ஏன் சுடலைக்கு என்னையுஞ் சேர்த்துக் கொழுத்தவோ?" — அழுகுரல் கட்கு மேலாக இவ்வழுத்தக் குரல் ஒலித்தது.

ஆவேசத்துடன் நான் அழுகிறேன்."இப்ப நான் போறேன். பிறகு ஒரு நாளைக்கு வரத்தான் போறேன்"—என்னையறியாது வார்த்தைகளை வடிக்கின்றேன். "ஓ! வருவாயாக்கும் அது நான் செத்தாப்போலை!"

"நீங்க செத்தாப்போலையில்லை, உங்களோடை ஒன்றிய வரட்டுக் கௌரவங்கள் செத்தாப்போலை."-எனக்கு நான் கூறுகிறேன்.

"தம்பீ...என்ரை ராசா..." —அழுகுரல்கட்கு மேலாக ஓர் அழுத்தமான குரல்ஒலிக்கிறது.

எனது காதுகளைச் செவிடாக்குகிறேன். இதயம் தானுகவே கல்லாகி விடுகிறது. கால்களை இயந்திரமாக முன்னேறுகிறேன். என் பின்னே தொடரும் மூன்று ஜீவன்களிடையே எழும் விம்மலும் விசும்பலும் மட்டும்......... என்ஞலிப்போ தெளிவாக உணர முடிகிறது.

"என்ன மாதிரியிருந்த பூசாரியற்ற குடும்பத்துக்கு எப்பிடிச் சீலக்கேடு வந்தது பாத்தியளே? பொடியரும் அப்பிடி.........இனி இளைய பொடிச்சியும் படிப்பிச்ச இடத்திலை அவன் வடலித்திடல் வல்லியின்ரை பொடியனேடை போனுள்! செத்த தாய் செத்ததுக்குகூட வரேலைப் பாத்தியளே மாஸ்டர்"— படலையடியில் யாரோ சொல்லிக்கொள்வது என் காதுகட்குள் எட்டுகிறது.

"தங்கைச்சி......நீயும் என்னைப்போலை......!வெறும் வெட்டிப்பேச்சாலை 'சாதனை'புரியும் இந்த மகிழூரில் நீ செய்தே காட்டிவிட்டாயா? நீ என் தங்கைதான்..."— கண்களிலிருந்து விழுந்த நீர்த்துளிகள் சூட்கேசில் பட்டுத் தெறித்து சுடு மணலில் வீழ்ந்து பொசுங்குகின்றன.

அந்தக் கல்லூரி.........மகிழூர் முருகையன் கோவில்...... தொழிற்பேட்டை....தொடராயமைந்துள்ள அந்தவீடுகள்... யாவையும் விட்டு நான் முன்னேறிவிட்டேன்.

அதோ...... இப்போ கிராமத்தின் எல்லையில் நாட்டப்பட்டிருக்கும் அந்த எல்லைப் பலகை வாசகங்கள் கலங்கிய என் கண்களுக்குப் மிகத்தெளிவாகத் தெரிகிறது.

"வணக்கம் மீண்டும் வருக!"

(யாவும் கற்பனையே!)

## காந்திஜியின் நகைச்சுவை

சுங்க அதிகாரியிடம் காந்தி கூறினுர்.

"நான் ஓர் ஏழைப்பரதேசி ராட்டை, சிறைச்சாலைத் தட்டுகள், ஒரு குவளை ஆட்டுப்பால் வீட்டிலே நெசவு செய்த ஆறு வேட்டிகளும் துவாய்களும் சில. இவையே என்னிடம் இருக்கின்றன"

மறுகணம் "என் கீர்த்தியும் இருக்கிறது. அதற்கும் அதிக மதிப்புக் கிடையாது" என்று கூறி பொக்கை வாயால் சிரித்தார்.

அனுப்பியவர்
சு. முரளிதரன்.



# புலிக்குப் பதில் குள்ளநரி

தாழை - செல்வநாயகம்

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டு ஆகியன அக்கால மக்களின் காதல் வாழ்க்கை வீரவாழ்க்கை பற்றிக் கூறிச் செல்வன. கலித்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்ருக இடம்பெற்ற போதிலும் சங்க மக்களின் வாழ்க்கை முறையிலும் இலக்கிய மரபிலும் சற்று விலகிச் செல்வதால் சங்ககாலத்திற்குப் பிற்பட்ட சங்கமருவிய காலத்தது என்பதும் ஒரு சாராரினது கருத்தாகும்.

அகம் என்பது யாது? ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம். அகத்தே நிகழ்வதால் அகம் ஆகுபெயராகும். இந்நுண்ணிய வரை விலக்கணத்திற்கேற்பவே கலித்தொகையும் சங்கப்புலவர்களால் இயற்றப்பட்டது. அனைத்தும் அகத்தில் நடக்கும் காட்சிகளைக் கொண்டுள்ளது கலித்தொகை.

உலகில் எந்நிகழ்ச்சியும் நிகழ்வதாயின் ஈரியல்புகள் தேவை; அவை நேரமும் காலமும்—நேரமும் இடமுமாகும். அதேபோன்று செய்யுளுக்கும் முதன்மையாக வேண்டியது இடமும் காலமுமாகும். இவை இலக்கியத்தில் முதல் பொருள் எனப்படும்: இடம் எனும் உட்பிரிவு மேலும் ஐந்தொகையாகப் பிரிக்கப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை எனப்படும். காலம் என்னும் உட்பிரிவு இருபிரிவுகளாக்கப்படும். பெரும்பொழுது சிறுபொழுது என அப்பிரிவுகள் உள.

பழந்தமிழர்கள் ஓராண்டு காலத்தினை இவ்விரண்டு திங்களைக் கொண்டு ஆறு கூறுகளாய் வகுத்தனர். கார், கூதிர் இளவேனில், முதுவேனில், முன்பனி, பின்பனி ஆகிய பருவங்கள் ஒவ்வொன்றும் இவ்விரு திங்களைக் கொண்டது. அதேபோன்று நாளொன்றினை ஆறு கூறுகளாக வகுத்தனர். இவை சிறு பொழுதுகள் எனப்பட்டன.

கலித்தொகையும் மேற் கூறப்பட்டுள்ள இலக்கிய மரபிற்குட்பட்டு, எமது காட்சிக் களத்திற்கும் மெருகூட்டுவதாய் அமைந்துள்ளது. எமது களத்தை அடைவதற்கு முன்னர் களத்தின் சுற்றுடலை ஒரு நோட்டம் விடுவோம்.

குறிஞ்சியின் தெய்வம் முருகக் கடவுள் (சேயோன்) இங்கு வாழும் மக்களில் உயர்ந்தோர் எனக் கணிக்கப்பட்டோர், பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி ஆகியோராவர். தாழ்ந்தோர்கள் எனக் கணிக்கப்பட்டோர். குறவர், கானவர், குறத்தியர், வேடுவர், வேடுவித்தியர் (தொல்-உரை) ஆகியோரராவர். குறிஞ்சி நிலத்திற்குச் சொந்தமான காட்டுவிலங்கு புலி, கரடி, யானை, சிங்கம் என்பனவாகும். இந்நிலத்திற்குச் சொந்தமான பூ! வேங்கை, காந்தள் என்பன. இந்நிலத்தில் வாழ்கின்ற மரங்கள் தேக்கு, அகில் (சந்தணமரம்) அசோகு, மூங்கில் என்பன. குறிஞ்சி நில மக்களின் உணவு மலை நெல், மூங்கில் அரிசி, தினை ஆகியன. இவர்களது தொழில் வெறியாடல், மலைநெல் விதைத்தல் தினைகாத்தல், தேன் எடுத்தல், கிழங்கு கிண்டி எடுத்தல், ஆகியனவாகும். இவற்றினைவிட, மேலான ஓர் ஒழுக்கமும் இந்நிலத் தலைவன் தலைவியரிடையே நடைபெறும். அது களவு ஒழுக்கம் எனப்பட்டது.

இனி எமது களத்தில் குதிப்போம். குறிஞ்சி நிலத்தில் ஓர் இடத்தில் களவு ஒழுக்கம் நடக்கின்றது. இரவிலே தலைவன் தலைவியைக் காண வருவான். இருவரிடையேயும் ஒரு தோழியும் இருப்பாள். மறைந்திருப்பாள் அவள். புதரில் புலியும் மறைந்திருக்கும் அதேபோல் அருகே அவளும் மறைந்திருப்பாள். புலி இரையில் கண்ணுயிருக்க தோழி, தலைவன் தலைவியின் களவின்பத்தில் கண்ணுயிருப்பாள்.

ஆனால் இங்கு அதுதான் நடக்கவில்லை. குறியிடத்தில் தலைவன் இரவிலே வந்து காதலியின் வரவிற்காக காத்து நிற்கின்ருன். காதலியான தலைவி யோசிக்கின்ருள். அவன் இரவு வேளையில் என்னிடம் வருவதனை நிறுத்த வேண்டும். விரைவில் அவன் என்னை மணம் மேற்கொள்ளவேண்டிய கருமங்களைச் செய்ய வேண்டும், எனப் பொய்யாக நினைத்த தலைவி


## தேன்மதி

இருமாத இதழ் 2 ரூபா. கவிஞர் அன்பு முகையதீன் முகப்புக் கொண்டது. மூன்று பிரதி எடுத்தால் மூன்று ரூபா. 'சூருவளி' நாவல் இனும்.

காசுக்கட்டளை அனுப்புங்கள்.
வி. பி. பி. கிடையாது

'மருதூர்வாணன்'
''தேன்மதி'' நூலகம்,
அல்ஹம்ரு வீதி,
மருதமுனை-2.

# "வாழ்க்கையும் உளத்தத்துவமும்"

ஒருகுடியானவன், அவன் மனைவி, அவர்களு
டையமகள் மூன்று பேரும் முழுச் செவிடர்
கள். குடியானவனும் அவன் மகளும் களத்தில்
இருந்தார்கள். குடியானவன் மனைவி வீட்டி
விருந்து சோறு கொண்டு வந்தாள். குடியான
வன் சாப்பிட ஆரம்பித்தான். அவனுடைய
மாடு ஒன்று சற்றுத் தூரத்தில் வயலில் இறங்
கியதைப் பார்த்தான். அந்த மாட்டை
அதட்டுவதற்காக "இந்தா! இந்தா!" என்றான்.
அவன் உதடு அசைவதைப் பார்த்து விட்டு
அவனது மனைவி, "இன்றைக்கு நான் சமைக்க
வில்லை; உன் அக்காதான் சமைத்தாள் அதனால்
தான் குழம்பு நல்லாயில்லை!" என்று சொன்
னாள்.

அவள் ஏதோ சொல்வதைப் பார்த்த
குடியானவன் "அதெல்லாம் முடியாது! மயிலை
மாட்டையும் சேர்த்துத்தான் கொடுப்பேன்.
தனித் தனியாய்ப் பிரித்து விற்கமுடியாது!"
என்றான். இவர்கள் இரண்டு பேரையும் கவ
னித்த அவர்களுடைய மகள், "மூத்த மாமன்
மகனைக் கட்டிக்கச் சொன்னாலும் கட்டிக்கி
றேன்; இளைய மாமன் மகனைக் கட்டிக்கச்
சொன்னாலும் கட்டிக்கிறேன். உங்கள் இஷ்
டம்!" என்றாள்.

ஒருவர் சொன்னது இன்னொருவர் காதில்
விழவில்லை, இதனால் அவரவர்கள் மனதுக்
குள்ளே என்ன எண்ணம் இருந்ததோ அதை
வெளியிட்டார்கள்.

"வாழ்க்கையும் உளத்தத்துவமும்" என்ற
பொருள் பற்றித் தமிழ் விழாவில் பேராசிரி
யர் அருள்நந்தி இக்கதையைத் தமது அரிய
சொற்பொழிவுகளுக்கிடையே கூறினார்.

("கல்கி"யின் 'யான் கண்ட தமிழ் மாநாடு'
தொடர் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது.
77ம் ஆண்டு 'சுடர்' இதழ்களிலும் "கல்கி
கண்ட தமிழ் மாநாடு" என்ற தலைப்பில் கட்
டுரை வெளியானது.)

— க. மாணிக்கம்.

---

யும் தோழியும், முதல்நாள்தான் அவனை
இரவில் சந்திக்கச் சென்றபோது தான்பட்ட
துயரினைத் தன் தோழிக்கு எடுத்துரைக்கின்
றாள்.

"திருந்திழாய் கேளாய் நம்ஊர்க் கெல்லாம்சாலும்
பெருநகை! அல்கல் நிகழ்ந்தது ஒரு நிலையே"
(கலி-29)

என்று தன் தோழியை விழித்துக் கூறு
கின்றாள். நம் ஊருக்கெல்லாம் பொருந்தும்
ஒரு வேடிக்கை நேற்றிரவு நடந்தது. மக்கள்
இறந்த நிலையில், உறங்கிய வேளையில், அழகிய
போர்வையினால் என்னை மூடிக்கொண்டு, அழ
கிய மார்பனாகிய எனது காதலன் வரச்
சொன்ன இடத்திற் போய் நான் காத்து நின்
றேன்.

நின்றேனா? அங்கே ஒருவன் வந்தான்.
மயிர் சொட்டையான வழுக்கைத் தலை,
அதன்மேல் ஒரு முக்காடு, கருங்குட்டத்தால்
குறைந்துபோன கால், கைகள், நம் சேரியை
விட்டுப் போகாது வந்து கிடக்கும் முடவனான
கிழட்டுப் பார்ப்பான் தானடி அவன். அவன்
அங்கு என்ன செய்தான் தெரியுமோ?

என்னையே பார்த்தான், மண்டியிட்டான்
பணிந்தான் பொழுதல்லாத பொழுதிலே
இங்கு வந்து நிற்கின்றாயே, என்று கூறினான்.
"வைக்கோலைக் கண்ட கிழட்டு எருதுபோல"
என்னை விட்டுப் போகாமல் சுற்றிச் சுற்றி வந்
தான். பெண்ணே! வெற்றிலை பாக்குத் தின்
பாயோ? என்று தன் பையை நீட்டினான்.

நானோ, பேச்சு எழாமல் நின்றேன்
விரைந்து அவன் அகன்று சென்றான். 'சிறுமியே!
நீ என்கையில் அகப்பட்டுக் கொண்டாய்,
நீயோர் பெண் பிசாசு நானோர் ஆண் பிசாசு
என்னை ஏற்க' என்று பிதற்றினான். வாய்க்கு
வந்தவாறெல்லாம் உளறினான். கிழடு அஞ்சி
விட்டது என்பதை நான் அறிந்து கொண்
டேன். ஒரு கைநிறைய மணலை அள்ளி அவன்
மேல் தூவினேன். அந்நிலையில் அவன் உரத்
துக் கதறி ஊரெல்லாம் கேட்குமாறு கூச்ச
லிட்டான்.

ஒடுங்கா வயத்தின் கொடும் கேழ்க் கடுங்கண்
இரும்புலி கொண்மார் நிறுத்த வலையுள் ஓர்
ஏதில் குறுநரி பட்டற்றால்! (கலித்)

அங்கே கெடாத வலியும் வளைந்த கோடு
களும், கருமையான கண்களும் உடைய பெரிய
புலியைப் பிடிக்க நினைத்தவர் விரித்த வலையி
னுள் ஒன்றுக்கும் உதவாத ஒரு குள்ளநரி
வந்து விழுந்ததைப் போலிருந்ததடி, என்
நிலைமை, நம் ஊரிலுள்ள கன்னியர்க்கெல்லாம்
இப்படித் துன்பம் தருவதனையே வாழ்க்கை
யாகக் கொண்ட கிழட்டுப் பார்ப்பானின்
செயலால், என் காதலனைக் கண்டு மகிழவும்
முடியாமற் போனதுடன் கேலிக் கூத்தாகவும்
முடிந்துள்ளது.

தலைவி இதனைத் தோழியிடம் கூறக்
கேட்டதும் தலைவன் தன்னால் அவள்படும்
துயரை எண்ணி விரையவந்து அவளை மணந்
தான் என்பது கருத்து.

சான்று: கலித்தொகை
புலியூர்க் கேசிகன் தெளிவுரை.

# இலக்கிய பிரச்சினைகள்

—ரம்மா—

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சமூகக் குறைபாடுகள் என்பவற்றைக் கண்டு சீறி எழுந்த படைப்பாளிகள் இன ஒடுக்கு முறையை ஒரு பிரச்சினையாகக் கவனத்திற் கொள்ளத்தவறியது ஏன்?

மனிதாபிமானமும் கலைத்திறனும் கொண்ட படைப்பாளிகள் சௌகரியமாக இப்பிரச்சினைகளைப் புறக்கணித்தது ஏன்?

1948ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் அடைந்தகாலகட்டத்தை அடுத்து ஈழத் தமிழரில் ஒரு பெரும்பகுதியினரான மலையகத் தொழிலாளர் பரம்பரை குடியுரிமை இழந்த போது......

1956ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் மொழியினைப் பேசும் மக்களின் தொண்டைக்குள்ளே சிங்களத்தைத் திணிக்க முயன்ற வேளையில்......

1958இலும் 1977இலும் 'துட்டகைமுனு' விழித்துக்கொண்டு "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என அறைகூவல் விடுத்தபோது......

1961இல் தமிழ் மக்களின் இணைந்த அறப்போராட்டம் அடக்குமுறையால் முறியடிக்கப்பட்ட வேளையில்......

எழுபதுகளில் தமிழ் இளைஞர்களின் உயர் கல்வி வாய்ப்புகள் தரப்படுத்தல் என்ற 'யுக்தி'யால் தட்டிப்பறிக்கப்பட்ட போது......

தென்னிலங்கை ஆட்சியின் கூரிய கரங்கள் தமிழ் மக்களின் இதயத்தை அடிக்கடி பதம்பார்க்கின்ற சந்தர்ப்பங்களில்......

1974இல் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு நடைபெற்ற பொழுது நிகழ்ந்த படுகொலைச் சூழ்நிலையில்......

நமது சமூகப்பார்வையுள்ள; சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கியச் சிந்தனையாளர்கள் என்ன சிந்தனையில் இருந்தனர்? எங்கு போயிருந்தனர்? என்ன செய்துகொண்டிருக்கின்றனர்?

இவை தமிழ் மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் அல்ல என்று கருதுகிறார்களா?

அல்லது இப்பிரச்சினைகளைப் பெரிது படுத்தாமல் தென்னிலங்கை நண்பர்களுடன் தேசிய (?) நட்பு உரிமை பாராட்டவேண்டும் என்று கருதுகிறார்களா?

அல்லது இப்பிரச்சினைகளை வழிநடத்தும் அரசியல் தலைமை மீது கொண்ட பகைமை காரணமாக—இப்பிரச்சினை மீது தாங்கள் கவனம் செலுத்துவது தமது கருத்துடன் முரண்பட்ட கட்சியின் அரசியல் லாபத்துக்குப் பயன்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக—பார்த்தும் பாராததுபோல் இருக்கிறார்களா?

அல்லது மாற்று வழிகள்கூறி அதில் வெற்றிகரமான சாதனைகள் புரிந்திருக்கின்றார்களா?

இவற்றுக்கான விடையை அணுகுவதற்கு நாம் கடந்த மூன்று நான்கு தசாப்த ஈழத்து இலக்கியங்களையும் அரசியல் சமூகப் பிரச்சினைகளையும் தொடர்புபடுத்தி நோக்க வேண்டும்.

மலையகத் தமிழ்த் தொழிலாளரின் குடியுரிமைப் பறிப்பு

தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களிலே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்.

தனிச்சிங்கள சட்டமூலம் மொழித் திணிப்பு.

நியமனங்களில் இன ஒதுக்கல்.


உயர்கல்வியில் தரப்படுத்தல்.

கட்டவிழ்த்து விடப்படும் 'துட்டகைமுனு' 'பிராண்ட்' பிரசாரங்கள்.

இவற்றின்மூலம் கடந்த நான்கு தசாப்தங்களில் விஸ்வரூபமடைந்துள்ள பௌத்த சிங்கள பெருந் தேசியவாதத்தால் அடக்கியொடுக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஈழத்தின் நவீன தமிழிலக்கியத்தில் முனைப்பான இடத்தைப் பெறவில்லை என்ற உண்மையை நவீன இலக்கியகாரர் பலரும் உணரத்தலைப்பட்டுள்ளனர்.

(தொடரும்)

# கண்டோம் கருத்தறிந்தோம்!



வித்தியாபூஷணம் நா. சுப்பிரமணியம் எம். ஏ. அவர்களை பலதடவைகள் சந்தித்திருக்கிறேன். மக்கள் கூட்டம் 'ஆ'வென்று வாய் பிளந்திருக்க கோயில்களிலே இதிகாச புராண சமய தத்துவ விரிவுரைகள் நிகழ்த்துவார். இலக்கிய விமர்சனக் கூட்டங்களிலே விளாசுவார். பல்கலைக்கழக இலக்கிய மேடைகளில் நிகழும் சர்ச்சைகளில் கச்சை கட்டுவார். அவரோடு கதைப்பது இலக்கிய மழையில் முழுகுவது போல சுகமான அனுபவம். இரசிகமணிதான் ஞாபகத்துக்கு வருவார். இன்று உயிர்த் துடிப்புடன் வேகமாகப்பணியாற்றும் விமர்சகர் அவர். வேறு பலரைப் போலன்றி அவர் படித்துத்தான் விமர்சனம் செய்வார். இப்போது ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் விரிவுரையாளர்.

கேள்வி: சமகால ஈழத்து இலக்கியப் பிரச்சினைகள் பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?

பதில்: முக்கியமாக எழுத்தாளர்களின் பெருக்கத்துக்கேற்ப போதிய பிரசுரகளம் இல்லை. எழுத்தாளர்களுக்கு போதிய வருமானம் இல்லை. தமிழ் நாட்டு இலக்கிய உலகம் வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இங்கு நிலைமை மாறுபாடானது எமது எழுத்தாளர்கள் திறனாய்வாளரின் அல்லது வாசகரின் பாராட்டுதல்களிலேயே திருப்தி காண்கிறார்கள். இங்கு வாசகர் வட்டம் குறுகியதாக இருப்பதாலும் விமர்சகர் கருத்தை மதிக்கும் தேவை எமது எழுத்தாளர்களுக்கு உண்டு. ஆனால் தமிழ் நாட்டில் விமர்சகர்களுக்கு பயம் இல்லை. விமர்சனம் செய்யும் சிகரம் — தாமரை போன்றவை பெரும் பத்திரிகை அல்ல. அவற்றில் எழுத்தாளர் தங்கியிருக்கவும் இல்லை. நம் நாட்டின் பழைய எழுத்தாளர்கள் ஒதுங்குவதற்கு நமது இலக்கியத்துறையில் உள்ள இத்தகு களம் இன்மை 'வருமானம் இன்மையும் காரணமாக இருக்கலாம்'

கேள்வி; தமிழகத்தில் இருக்கும் மாறுபாடான இந்நிலைகூட ஆரோக்கியமானதாகவே நான் கருதுகிறேன். நமது எழுத்தாளர்கள் எழுத்தை நம்பி வாழ்பவர்கள் அல்ல. வெவ்வேறு தொழில் செய்து கொண்டே எழுதுபவர்கள். சமுதாயப் பணி என்று எழுதுபவர்கள் ஒய்ந்து விட்டதற்கு 'வருமானம்' காரணம் என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. எங்களாலே ஒன்றும் முடியாது என்ற தோல்வி மனப்பான்மையே காரணம் என்று கருதுகிறேன். ஆனால் தமது விரக்தியை ஆர்வத்துடன் எழுதும் இளைஞர்களிடம் திணித்து மலடாக்க முயற்சிப்பது தான் விமர்சனம் தருகிறது.

பதில்: உண்மைதான். உருவாகிவரும் எழுத்தாளனுள் உள்ளடங்கியுள்ள 'மேதை'யை இனங்கண்டு வளர்த்தெடுப்பது நமது தலையாய கடமை என்று கருதுகிறேன். அந்த ஆர்வத்தினாலேயே சமகால இலக்கியங்களை உடனடி விமர்சனம் செய்வதில் ஈடுபாடு கொண்டுள்ளேன்.

கேள்வி: எழுத்தாளன் சிறுமை கண்டு பொங்குபவனாக இருக்கவேண்டும் என்று நீங்கள் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு. ஆனால் நமது எழுத்தாளர்கள் இந்நாட்டில் நடக்கும் இன ஒடுக்கலை கண்டித்து எழுத முன்வராத காரணம் என்ன?

பதில்: எழுதவில்லை என்று கூறமுடியாது இங்குள்ள பெரும்பாலான பிரசுரசாதனங்

கள் அத்தகைய கருத்துக்கு மாறுபட்டவர்களின் கையில் உள்ளதால் வெளிவராமல் இருக்கலாம். தவிரவும் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஆசிரியர்களாக அல்லது உத்தியோகத்தர்களாக இருப்பதால் அவர்கள் இனப்பிரச்சினை போன்றவற்றை அரசியல் பிரச்சினை என்று ஒதுக்கக்கூடும். தேசியம் தேசியம் என்று எவ்வளவுதான் கூறினாலும் நம்மவர்களில் பலருக்கு தமிழக எழுத்தாளர்களின் நிழல் இருக்கிறது.

கேள்வி: தமிழக பத்திரிகை, சஞ்சிகைகளின் இறக்குமதி ஈழத்து இலக்கியத்தை பாதிப்பதாக கருதுகிறீர்களா?

பதில்: கட்டுப்படுத்தப்பட்டிருந்த 7 ஆண்டு காலப் பகுதியில் ஈழத்து நாவல் நல்ல வளர்ச்சிப் பாதையில் வந்தது, நிறுவன ரீதியான வெளியீடுகள் அதன் வெளிப்பாடுகளே. ஆனால் அவையாவும் தரமானவை என்று கூறமுடியாது. தமிழகத்தில் குப்பை என்கிறோம் ஆனால் அதைவிடக் குப்பையும் வந்தன. மாத சஞ்சிகைகளைப் பொறுத்தவரை 7 வருடத்திலும் 40 சஞ்சிகைகள் தோன்றி மூன்று நான்கு சஞ்சிகைகளே இருக்கின்றன. முதலிட ஒரு நிறுவனம், திறமையான ஆசிரியர் இவை இணையும் போதே சஞ்சிகை வெளியீடு வெற்றியளிக்கும் இருவரும் ஒருவரேயானால் நின்று நிலைப்பது கடினம். ஒரு சில மட்டும் ஆசிரியர்களின் அயரா உழைப்பை மூலதனமாகக் கொண்டு ஆயுளை நீடித்து வருகின்றன.

கேள்வி: கலாநிதிப்பட்டத்துக்கு யாப்பிலக்கணத்தில் ஆராய்ச்சி செய்து வருகிறீர்கள். அதே வேளை ஈழத்து தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளீர்கள். ஆனால் இப்போது கேள்வி... எம். ஏ. பட்டத்துக்காக ஈழத்து நாவல் பற்றி ஆராய்ந்தீர்கள் அது நூலாகவும் வந்தது. அது தொடர்பான அனுபவக் கருத்துக்கள்?

பதில்: சில எழுத்தாளர்களிடம் தாம் எழுதியவற்றின் பிரதிகளே இல்லை. திரட்டி வைப்பதில் ஆர்வமில்லாதவர்களாக உள்ளனர். சில சமயங்களில் இரண்டு மூன்று தலைப்புக்களில் வெளிவந்தவை ஒரே நாவலாக இருந்தன. ஒரு தலைப்பில் தொடர் கதையாக வெளிவந்தது. வேறு தலைப்பில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. சில எழுத்தாளர்கள் காலகட்டத்துக்கு முக்கியமானவர்கள் என்ற வகையில் உ—ம்: ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை. நல்ல முறையில் எடுத்துக் காட்டியுள்ளேன். ஆய்வின்போது சிறந்ததாகப்பட்ட 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' நாவலை தமிழ்நாட்டில் சிவபாத சுந்தரனுக்கு அனுப்பினேன். பின் கணையாழி அட்டையில் ஈழத்து நாவலுக்கு வயது வந்துவிட்டது என்று எழுதியிருந்தார்கள். நமக்கெல்லாம் பெருமை தரும் விடயம் இது.

## ரீ. பா: ஒரு குறிப்பு

வைகாசி மாதச் சுடரில் வெளிவந்த 'இலக்கியச்சந்திப்பு' கட்டுரையில், ரீ. பா. அவர்களைப் பிரபல கவிஞர் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இது பற்றி ஒரு சிறு விளக்கம் தரவேண்டியிருக்கிறது.

ரீ. பா. அண்மைக்காலமாக நகைச்சுவை கவிதைகள் எழுதிவந்தாலும், அவர் ஒரு நகைச்சுவை எழுத்தாளர் என்ற வகையிலேயே தன் பெயரை நிறுவியுள்ளார். ரீ. பாக்கியநாயகம் என்றால் தெரியாத வாசகர்கள் இருக்க முடியாது. இவருடைய நகைச்சுவைக் கட்டுரைகள் இலங்கை ஏடுகள் பலவற்றிலும் ஏராளமாக முன்பு வெளிவந்துள்ளன. தமிழக ஏடுகளான 'கலைமகள்', 'ஆனந்தவிகடன்' முதலிய சஞ்சிகைகளிலெல்லாம் இவருடைய கட்டுரைகள் நிறைய பிரசுரமாகியுள்ளன. பிரபல நகைச்சுவை எழுத்தாளர் 'நாடோடி'யால் பாராட்டப்பட்டவர் ரீ. பா.

தமிழைப்போலவே ஆங்கிலத்திலும் சரளமாக எழுத வல்லவர் இவருடைய ஆங்கிலக்கட்டுரைகள் பல "ஒப்சேவர்" 'டெயிலிநியூஸ்', 'டைம்ஸ் ஒவ் சிலோன்' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளன பல புகைப்படங்களும், கட்டுரைகளும் வெளிநாட்டு சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. தனது கட்டுரைகளுக்காகப் பல பரிசுகளும் பெற்றிருக்கிறார். (அண்மையில் 'வீக்எண்ட்' சஞ்சிகை நடத்திய பிசாசுக்கதைப் போட்டி ஒன்றில் இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறார்.)

ஆழமான நகைச்சுவையுணர்வு கொண்ட இவரைப் பின்பற்றி இளைஞர் பலர் எழுதிப் புகழ் பெற்றுள்ளனர் இவர்களில் திரு. பொ. சண்முகநாதன் குறிப்பிடத்தக்கவர்.

ஆகவே ரீ. பா. அவர்களைக் கவிஞர் என்று குறிப்பிடுவதைவிட 'நகைச்சுவை எழுத்தாளர்' என்று குறிப்பிடுவதே தக்கது.

— மணி.

கேள்வி: புதுக்கவிதை பற்றி உங்கள் கருத்தென்ன?

பதில்: கவிதை என்றால் கவிதைதான் அது யாப்புள்ள கவிதையோ அல்ல யாப்பில்லாத கவிதையோ என்றெல்லாம் பிரித்துப்பார்க்கவேண்டியது இலக்கியச் சுவைக்கு

அப்பாற்பட்ட விடயம். தான் கருதிய பொருளை கவிஞனொருவன் வாசகனது உள்ளத்திலே முழுமையாக பதியவைக்க முடிந்தால் அத்தகைய கவிதை சிறந்த கவிதையாகிறது. எனவே பொருளுக்குத்தான் வடிவமேயன்றி வடிவத்துக்குப் பொருளல்ல. ஆனால் ஒரு கருத்தை வசனத்தில் கூறுவதற்கும் கவிதையில் கூறுவதற்கும் உள்ள அடிப்படை வேறுபாடு ஓசை. இந்த ஓசை அமையும் போது வசனம் கவிதைத்தன்மை பெறுகிறது. இவ்வோசையை அலகிட்டு விளங்கிக்கொள்வதற்கே யாப்பிலக்கணக் கூறுகள் அமைந்தன. எனவே அடிப்படை ஓசையேயன்றி யாப்பு அல்ல.

கேள்வி: யாப்பை மீறிய கவிதை புதுக் கவிதை, வசன கவிதை என்று கூறுவது பொருந்துமா?

பதில்: இது யாப்பு என்றால் என்ன என்பது பற்றி ஒரு காலகட்டத்திலே நிலவிய தவறான கருத்துக்களைத்தான் காட்டுகிறது. ஏனெனில் யாப்பு என்பது விருத்தம், வெண்பா, கட்டளைக்கலிப்பா, ஆசிரியப்பா என்ற சில போர்மியூலாக்களை மட்டும் குறிப்பது அல்ல. எழுத்து இன்னொரு எழுத்தோடு சேரும்போது இசைந்து பெறுகிற ஓசையே யாப்பு ஆகிவிடுகிறது. காளமேகப் புலவர் பாடிய பிறப்பிறப்பிலே என்பது ஒரு சீரிலே அமைந்த கவிதை. இது போல் ஓரடிக்கவிதைகளும் அமையலாம். எனவே அடியோ தலையோதான் முக்கியமல்ல. கருத்து சரியான வகையில் செலுத்தப்படுகிறதா என்பதே முக்கியம். அது கவிஞனின் மொழி ஆற்றலைப் பொறுத்தது.

கேள்வி: உங்களின் இலக்கிய ஈடுபாடு பல்கலைக்கழக தமிழ்ச் சிறப்புக் கல்வியால் ஏற்பட்ட ஒன்றா அல்லது......

பதில்: நான் ஐந்து ஆறுவயதுச் சிறுவனாக இருக்கும் பொழுதே கந்தபுராணம் மகாபாரதம் முதலிய பேரிலக்கியங்களைச் சுவைக்கும் வாய்ப்புப் பெற்றவன். இவ்வகையில் எனது தந்தையார் முள்ளியவளை ஜெ. நாகராஜ ஐயர் அவர்கள்தான் எனது வழிகாட்டி. அவரும் காலஞ்சென்ற முள்ளியவளை கணேசையர் (சுப்பையர்) அவர்களும் கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி, திருவெம்பாவை நாட்களில் புராணபடனம் செய்வார்கள். பாடசாலைக்கு கள்ளம்பண்ணிவிட்டுப் புராணப் படனத்தினைச்சுவைத்து ஈடுபாடு கொண்டயான் பன்னிரண்டு வயதிற்குள் அத்தகைய இலக்கியங்களைக் கற்கவும் மேடையில் பயன் கூறி விரிவுரை செய்யவும் பழகி விட்டேன். அதே சமயம் ஏழுவயதிலிருந்து கல்கி, கலைமகள் முதலிய தமிழக சஞ்சிகைகளையும் வாசிக்கத் தொடங்கிவிட்டேன். பதினைந்து வயதுக்குள் திருக்குறள் முழுவதையும் மனப்பாடம் செய்துவிட்டேன். 1949இல் பொன்னியின் செல்வன் முதன் முதலில் பிரசுரமான பொழுது தொடர்ந்து வாசித்தேன். தொடர்ந்து எல்லா தொடர்கதை, சிறுகதைகளையும் விடாமல் வாசித்தேன். வாசிக்கிறேன். இவ்வாறு இருவகை இலக்கியங்களிலும் நான் கொண்ட இளமை ஈடுபாடு பல்கலைக்கழகத்தில் தமிழைச் சிறப்பாகப் பயிலத் தூண்டியது. பேராசிரியர் சு. வித்தியானந்தன (துணைவேந்தர்) அவர்களின் மூலம் அதற்குக் கிடைத்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்தினேன். பல்கலைக்கழகக் கல்விக்காக சமஸ்கிருத மொழி பயின்றேன். அது எனது இலக்கிய ஈடுபாட்டை மேலும் வளம்படுத்தியது.

முக்கியமாக முள்ளியவளை ஒரு கலை மணக்கும் கிராமம். பிறந்த நாட்தொடக்கம் சூழவர இசை நாட்டுக்கூத்து, நாடகம் என்ற கலைச்சூழலிலே வளர்ந்தவன். ஒரு இசையாளனாகவோ அல்லது நாடக கலைஞனாகவோ மலரவேண்டிய நான் இலக்கியத்துறையிலே என்னை முழுமையாக ஈடுபடுத்தியதனாலும் உயர் கல்வியில் ஏற்பட்ட ஆர்வத்தாலும் இலக்கியவாதியாக மாறிவிட்டேன்.

கேள்வி: இதிகாச புராணங்களையும் நவீன சிறுகதை, நாவல், கவிதைகளையும் ஒரே வகை ஈடுபாடுடன்தான் அணுகுகிறீர்களா?

பதில்: பண்பாட்டின் உயர் விழுமியங்களை (Values)ப் புரிந்துகொள்ள இதிகாச புராணங்கள் எமக்குக் கிடைத்த அரிய சொத்துக்கள். கற்கும் ஒவ்வொரு முறையும் புதிதாகச் சிந்தனையைத் தூண்டும். அவற்றை விரிவுரை செய்வதையும் அறிஞர் பெருமக்களுடன் அவற்றின் உட்பொருள் சார்ந்த புதிய சிந்தனைகளைப் பரிமாறிக் கொள்வதையும் எனது வழக்கமாகக் கொண்டுள்ளேன். நவீன இலக்கியங்கள் புதிய சமுதாயத்தை உருவாக்கும் மகத்தான பணியைப் புரிவன. நம்மில் நேரடியாக அறிய—அநுபவிக்க முடியாத பல்வேறு பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகளை எம்மை மானசீகமாக அநுபவிக்கச் செய்பவை. நவீன சமூக சிந்தனையின் நாடித் துடிப்பைப் புரிந்துகொள்ள இவ்விலக்கியங்களைக் கற்பதும் தரமானவற்றைப் பாராட்டுவதும் அவசியம் என்று கருதுகிறேன்.

கேள்வி: நீங்கள் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது அங்கு நிலவிய நவீன இலக்கியச் சூழ்நிலையையும் இன்று விரிவுரையாளராகப் பணிபுரியும் போது உள்ள நிலையையும் ஒப்புநோக்கும்போது குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் புலனாகின்றனவா?

பதில்: ஆர்வத்தில் குறைத்து மதிப்பிட முடியாது. அன்றும் புதிய ஆவேசத்துடன் இலக்கியம் வளர்க்க ஒரு பரம்பரை முன்னின்றது. இன்றும் அதே ஆர்வமும் ஆவேசமும் காணப்படுகிறது. ஆனால் அன்றைய காலத்தை

விட இன்று எழுத்தாளர்—வாசகர்—திறனாய்வாளர் தொகை பெருகியுள்ளது. அன்று இலக்கியத்தின் பணி பற்றியும் கலைத்திறன் பற்றியும் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. இன்று சர்வதேச இலக்கியக் கோட்பாடுகளும் கலைபற்றிய புதிய சிந்தனைகளும் பரவலாக வாசகர் மத்தியிற் பரவியுள்ளன. அன்று எழுத்தாளன் குறிப்பிட்ட சில திறனாய்வாளர்களின் கருத்துக்களுக்குச் செவிமடுக்கும் ஒரு போக்கு நிலவியது. இன்று அந்நிலை அருகிவிட்டது. எழுத்தாளன் தனது படைப்பாற்றலை உணரத்தலைப்பட்டுள்ளான். அன்று பெரும்பான்மையாகப் பல்கலைக்கழக வட்டத்திலிருந்தே புதிய இலக்கிய சிந்தனை பிரவாகித்தது இன்று பல்வேறு கிராமப்புறங்களிலிருந்தும் இலக்கிய கலை ஆர்வலர்கள் முன்வந்து கொண்டிருக்கிறார்கள். இவற்றுக்கான காரணங்களை விரிக்கிற் பெருகும். முக்கியமாக குறிப்பிடவேண்டிய ஒரு அம்சம் பல்கலைக்கழக உயர் பட்டங்களுக்கு ஈழத்து நவீன இலக்கியங்கள் ஆய்வுப் பொருளாகியுள்ளன. அவ்வகையில் நாவல்களை நானும் சிறுகதைகளை நண்பர் க. அருணாசலம் அவர்களும் நாடகங்களைச் "சொக்கன்" அவர்களும் ஆராய்ந்துள்ளோம். சோமசுந்தரப் புலவர், மஹாகவி ஆகியோருடைய கவிதைகளும் ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளன.

கேள்வி: சமகாலத் தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களையும் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புக்களையும் ஒப்பு நோக்கினால் குறிப்பிடத்தக்க முக்கிய அம்சங்கள் எவை?

பதில்: ஈழம், தமிழகம் என்ற வேறுபாட்டுணர்வுகட்கு அப்பால் தமிழிலக்கியம் என்ற நோக்கில் பார்த்தால் ஈழத்து எழுத்தாளரிற் பெரும்பாலானோரின் இலக்கிய நோக்கு சமூகமாற்றத்துக்கான துடிப்பாகவே சத்திய வேட்கையின் குரலாகவே வெளிப்படுகிறது. ஆயின் பெரும்பாலான தமிழக எழுத்துக்கள் வியாபார சந்தையைக் கருத்திற் கொண்டு எழுதப்படுகின்றன. இப்படிக் கூறுவதை தமிழகத்தின் எழுத்துக்கள் தரம் குறைவு என்று கூறுவதாகக் கொள்ளக் கூடாது. அங்கு எழுத்து வருவாய்க்குரிய ஒரு தொழில். இங்கு அது சமூகப்பணி. அங்குள்ள சில தலையாய படைப்பாளிகளை நாம் மதிக்கும்போது — அவர்களுக்கு நிகரான எழுத்தாற்றல் ஈழத்தில் இன்னும் உருவாகவில்லை என்ற உண்மையை ஒப்புக்கொள்ளும் போதும்—மேற்படி பிரசுரக்களம், பொருளாதாரப் பகைப்புலம் என்பவற்றை ஒதுக்கிவிட்டு நோக்கமுடியாது. குறிப்பாக அங்கு ஒரு எழுத்தாளன் தன்னைத் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டு படைப்பாற்றலை வளர்த்து வருவான். இங்கு பாராட்டத்தக்க முதல் முயற்சிகளுடன் இலக்கிய உலகிலிருந்து ஒதுங்கிக்கொள்கிறான். இதுவே சிந்திக்க வேண்டிய அம்சம்.

கேள்வி! சுடர் பற்றிய தங்கள் கருத்து?

பதில்: தமிழ் இனத்தின் உணர்வுகளை மதிக்கும் நோக்கில் எழுந்த இதழ் என்ற அளவிலும் உருவாகிவரும் எழுத்தாளனுக்குப் பயன்படும் பிரசுரக்களம் என்ற வகையிலும் சுடரின் பங்களிப்பு வரலாற்று முக்கியத்துவமுடையது. தரமான தமிழ் ஏடுகளாகத் திகழ்ந்து அகால மரணமடைந்த தமிழமுது, பூரணி, மலர் முதலியவை விட்டுச்சென்ற இடைவெளியைச் சுடர் நிறைவு செய்யவேண்டும். இதனை ஒரு இலக்கிய இயக்கமாக அடிக்கடி பல்வேறு பிரதேசத்திலும் கருத்தரங்குகள் நிகழ்த்துவதன் மூலமும் வியாபாரக்களத்தை விரிவுபடுத்துவதன் மூலமும் சாதிக்கலாம். சாதிக்கும் என்று நம்புகிறேன்.

செவ்வி: 'காவலூரான்'

ஸ்ரீகாந்தா கூறுகிறார்:

## நாம் செய்த தவறென்ன?
### 'சிறைப் பறவைக்'குப் பதில்

"சுடர்" (வைகாசி 1980) இதழிலே ஊரெழு மேற்கைச் சேர்ந்த க. பாலநடராசனின் மறுப்புக் கடிதத்தைப் படித்தேன். 1978 ஆகஸ்ட் மாத "சுதந்திரனி"லே வெளியான "நாம் செய்த தவறென்ன" எனுங் கவிதையைச் "சிறைப் பறவை" எனும் புனைபெயரிலே தாமே எழுதியுள்ளதாக அவர் கூறியுள்ள திருத்தத்தை யான் ஏற்றுக்கொள்கிறேன் அக்காலகட்டத்திலே, சிறைக்குள் இருந்தவர்களில் காசி ஆனந்தனே பிரபலமானவர்-அத்துடன், அவருடைய ஆக்கங்கள் சுதந்திரனிலும் சுடரிலும் மட்டுமே வெளிவந்துகொண்டிருந்தன. எனவே, "சிறைப் பறவை" எனும் புனை பெயரிலே மறைந்து எழுதியுள்ளதும் காசி ஆனந்தனாகத்தான் இருக்கும் என யான் எடுத்துக்கொண்ட ஊகத்திலேயே இத்தவறு நேர்ந்துள்ளது. மேலும், இவ்வாய்விற்காகத் தகவல்கள் திரட்டப்பட்ட காலத்திலே, (1979ம் ஆண்டின் முற்பகுதியில்) உணர்ச்சிக்கவிஞர் சிறைக்குள்ளேயே இருந்ததால் அவரை நேரடியாகச் சந்திக்க முயன்றும் முடியவில்லை. எனவே, பாலநடராசன் குறிப்பிட்டுள்ள தவறு இடம் பெற்றமைக்கு வருந்துகிறேன்.

# மேடை

## ஆனைமடு

ஆனைமடு உபதேர்தல் ஸ்ரீலங்காவில் இரண்டு பெரிய அரசியல் கட்சிகள் மட்டுமே உள்ளது என்பதை மீண்டும் நிரூபிக்கிறது. ஆட்சி அதிகாரப் போட்டி இந்த இரண்டு கட்சிகளுக்கு இடையில் மட்டும் இன்னும் பல வருடங்களுக்கு இருக்கப்போகிறதென் பது தெளிவாகிறது. வேறுவிதமாகச் சொன்னால் தென் இலங்கையில் ஒரு இடதுசாரி—சோசலிச—கட்சி உருப்படியாக — ஆட்சியை தேர்தல் மூலம் கைப்பற்ற முடியாத சூழ்நிலை இருக்கிறது. மக்கள் விடுதலை முன்னணிக்கும் ஆனைமடு தேர்தல் முடிவு நல்ல பாடமாக அமைந்துவிட்டது. எண்ணி 800 வாக்குள் மட்டும் எடுத்து கட்டுக் காசையும் இழந்திருக்கிறார்கள். கொழும்பு மாநகரசபை, காலி இடைத்தேர்தல் அவர்களது தலையைக் கொஞ்சம் கனக்கவைத்தது. ஆனைமடு அந்தக் கனத்தை குறைத்திருக்கிறது, நிற்க, மக்கள் விடுதலை முன்னணி இப்ப கொஞ்சக்காலமாக தமிழர் பிரச்சினை ஒன்று இருப்பதாகக் காட்டிக் கொள்வதில்லை.

## மோதல்

கோவை மகேசன் — ஈழவேந்தன் இருவருக்கும் சும்மா இருக்கத் தெரியாது. ஒருவர் பத்திரிகை ஆசிரியர். மற்றவர் வங்கி ஊழியர். கைநிறைய சம்பளம் வாங்கா விட்டாலும் ஏதோ வாழ்க்கைத் தேரை நகர்த்துவதற்கு ஏதோ வருகிறது. எடுக்கிற சம்பளத்துக்கு இரண்டு கட்டுரையை எழுதி நாலு பக்கங்களை நிரப்பி பத்திரிகையை 'வந்தால் வா போனால் போ' என்று வெளியிட்டுக் கொண்டிருக்கலாம். ஒருவருக்கும் நோ இல்லை. கோபமும் இருக்காது. பகையும் இல்லை. இது எழுதுகோலுக்கும்—இதயத்துக்கும் பாலம் அமைத்துக்கொண்டு, கொண்ட கொள்கையை— இலட்சியத்தை அணுவளவும் விட்டுக்கொடாது, வேண்டியவர்கள்—என்பதற்காக வளைந்து கொடாது, முகமன் பாராது நாளும்—பொழுதும் முழங்கிவருவது தப்பல்லவா? கோவை மகேசன் அதைச் செய்யலாமா?

ஈழவேந்தனை எடுத்துக்கொள்வோம். ஒரு அரசாங்க ஊழியராக இருந்து கொண்டும், செருப்புத்தேய நாட்டின் மூலை—முடுக்கெல்லாம் ஓடி கடந்த 25 வருடங்களாக 'ஜெட்' வேகத்தில் இயக்கப்பணி ஆற்றுகிறாரே என்ன பிரயோசனம்? ஈழவேந்தனுடன் ஒப்பிடும் பொழுது, எல்லாவித வசதிகளையும் அனுபவித்துக்கொண்டு இலவச பிரயாணம் இலவச அஞ்சல் தொலைபேசி இத்தியாதி— 'கட்சிப் பணியாற்றும்' பல பா. உக்களைப் பார்த்தாவது ஈழவேந்தன் 'திருந்தக்' கூடாதா?

இவைபோகட்டும். வேறு பணபலம்— பக்க பலமாவது இவர்களுக்கு இருக்கிறதா? அந்தஸ்து இருக்கிறதா?

பா. உக்கள் கட்சிக்கட்டுப்பாட்டை மீறலாம். கேட்க ஆளில்லை. இவர்கள் எப்படி கட்டுப்பாட்டை மீறலாம்?

இவர்களுக்கு இதுவும் வேண்டும்—இன்னமும் வேண்டும்!

## யாழ். மாநகரசபை

யாழ். மாநகரசபை தமிழறிஞர் தனிநாயக அடிகளாருக்கு பொதுவரவேற்பு அளித்துப் பாராட்டியமை எல்லோரது போற்றுதலுக்கும் உரிய செயலாகும். அதே போல் தந்தை செல்வநாயகத்தின் நினைவாலய திறப்பு விழாவிலும் மாநகரசபை முதல்வரும் உறுப்பினர்களும் நேரடியாகக் கலந்து கொண்டு பங்குபற்றியதையும் நிச்சயம் பாராட்டவேண்டும். முதல்வரும் — மாநகரசபையும் இன்னொரு நல்லகாரியம் செய்ய வேண்டும். அதுதான் தமிழ் இனத்துக்காக தனது உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்த கோப்பாய் கோமான் வன்னியசிங்கத்துக்கு சிலை எழுப்புவதாகும். முடியுமென்றால் மாநகரசபை முன்றலில் நிற்கும் அவமானச் சின்னத்தை அகற்றி விட்டு அந்த இடத்தில் வன்னியசிங்கம் சிலையை நிறுவுவது சாலச் சிறந்தது. முதல்வரும் மாநகரசபையும் இதைச் செய்வார்களா?

## அரசியலில் பல்லி

திருவாளர் குமார் பொன்னம்பலம் பத்திரிகைகளுக்கு யாரேனும் எழுதிக் கொடுத்த அறிக்கைகளை ஒன்றுக்குப்பின் ஒன்றாக விட்டுக் கொண்டிருக்கிறார். கூட்டணி ஏதாவது செய்தாலும் சரி செய்யாவிட்டாலும் சரி பல்லி சொல்லுவதுபோல உடனே ஏதாவது அறிக்கையை பத்திரிகைகளுக்கு விடுத்து தனது அரிப்பை தீர்த்துக்கொள்கிறார். அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் திருவாளர் குமார் பொன்னம்பலத்தினதும், அவரது சொந்தக் கட்சியான அகில இலங்கை புதிய தமிழ் காங்கிரசும் தமிழ் இனப்பிரச்சினைக்கு முன்வைக்கும் மாற்று மருந்து என்ன? சும்மா

# இது ஒரு சிறை

திக்கவல்லை இஜுயாஹ்

தலைநகரில் பாரிய வங்கிகளில் அதுவும் ஒன்று, மாடிக்கட்டிடம். புதுப்பொலிவுடன் தலைநகரை அலங்கரித்துக் கொண்டிருந்தது. மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர். எனக்கும் ஓர் அலுவல் அங்கே இருந்தது.

வங்கியினுள் நுழைகின்றேன்; 'சில்'என்ற குளிர் என்னைத் தழுவிக்கொள்கின்றது.

இயக்கிவிட்ட பொம்மைகள் போல வங்கியினுள் ஊழியர்கள் இயந்திரமாய் உழைத்துக்கொண்டிருக்கின்றனர். யாரை அணுகுவது யாருடன் பேசுவது என எனக்குத் தெரியவில்லை. சுற்றும் முற்றும் என் பார்வையை படரவிடுகிறேன்.

எங்கும் சிறுசிறு அறிவித்தல் பலகைகள் உருண்டை உருண்டையாக அழகான எழுத்துக்களில் அவை எழுதப்பட்டு கச்சிதமாகத் தென்பட்டன. சிங்களம்—தமிழ்—ஆங்கிலம் மும்மொழிகள் அங்கே இடம் பிடித்திருந்தன. என் உச்சி குளிர்ந்தது.

இந்தப் பாரிய கட்டிடத்தில் சிங்களத்தோடு இன்பத்தமிழும் சோடியாகத் தோற்றமளிப்பதைக்காண மகிழ்ச்சியடையாத தமிழ் நெஞ்சங்கள் இருக்க முடியாது.

அறிவித்தல் பலகைகளில் சிங்களத்தை அடுத்து தமிழும், தமிழுக்குப் பின்னால் ஆங்கிலமும் குடிகொண்டிருந்தது. தன்னைப்புடை சூழ சிங்களமும் ஆங்கிலமும் இருக்கின்றது என்ற தற்பெருமை தமிழுக்கு நெடுநாட்களாகவே இருந்து வருகின்றது.

** ** **

இயந்திரத்தோடு இயந்திரமாய் இணைந்துவிட்ட ஆடவரும் பாவையரும் உழைப்பை உரமாக்கும் அந்த வேளையிலே சம்பாஷணையொன்று தொடர்கின்றது... !

தமிழைப் பார்த்து ஆங்கிலம் சொன்னது: "நண்பனே! உனக்கென்ன குறைச்சல்? உனக்கு முன்னால் சிங்களமும் பின்னால் நானும் நின்று பாதுகாப்புத்தருகின்றோம் இல்லையா?"

தமிழுக்கு ஒரே பெருமை; கொஞ்சம் ஆணவமும் கூட. மௌனமாக நின்று ஆங்கிலத்தின் கருத்தை ஆமோதித்தது தமிழ்.

சில விநாடிகள் சென்றன.

தமிழிடமிருந்து ஏதும் பதில்வரலாம் என எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த அந்த



அறிவித்தல் பலகை தமிழை நோக்கி ஆத்திரமாகச் சொன்னது......

"ஏய்" தமிழா! இது உனக்குப் பாதுகாப்பன்று; இது ஒரு சிறை; முன்னும் பின்னும் சிங்களமும் ஆங்கிலமும் குடிகொண்டு பாதுகாப்பு என்ற பெயரில் உன்னை ஆட்டிப் படைக்கின்றன. தமிழை ஆளுகின்றனர். இந்நிலையில் உன்னால் சுயேச்சையாக இயங்க முடியாது. உன் பாதுகாப்புக்கு நீயே வேலி போடவேண்டும்; மாற்றான் வேலி நிலையானதன்று. சிங்களத்தை முன்னால் தள்ளி ஆங்கிலத்தை பின்னால் தள்ளி உனக்கென நிலையான இடத்தைத் தேடிக்கொள்" மரப்பலகையின் எச்சரிக்கை அப்பாரிய கட்டிடத்தினுள் முட்டிமோதி சங்கநாதமென ஒலித்தது. அறிவிப்புப்பலகைகள் ஆடி அசைந்தன!

தமிழ் சிந்தனையில் லயித்தது!

சிங்களம் பலகையை முறைத்துப்பார்த்தது!

ஆங்கிலம் வெட்கத்தால் தலைகுனிந்தது!

---

பல்லி சொல்வதுபோல் ஏட்டிக்குப்போட்டியாக கொழும்பில் இருந்து கொண்டு அறிக்கை விட்டுவிட்டால் மட்டும் போதுமா? அவரதும் அவரது கட்சியினதும் கொள்கை என்ன? தமிழ் இனத்தின் விடிவுக்கு தனித் தமிழ் ஈழமா? ஏக இலங்கையா? அல்லது இணைப் பாட்சியா? இதில் எந்தக்கொள்கை அவரது இலட்சியம்? கேள்விக்கு பதில் அளிக்க திருவாளர் குமார் பொன்னம்பலமும் அவரது கட்சியும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தனித் தமிழ் ஈழத்தை இலட்சியமாகக் கொண்ட தமிழர் விடுதலை கூட்டணியிடம் பாராளுமன்ற சீட்டுக்கு ரிக்கட் கேட்டு விண்ணப்பிப்பதும். ரிக்கட் கிடைக்கவில்லையென்றவுடன் அவசர அவசரமாக கட்சியொன்றை அமைத்து தேர்தலுக்கு நிற்பதும் தமிழ் மக்கள் அறியாத விடயமல்ல. அறிந்த விடயம். சுயநலம்—சந்தர்ப்பவாதம் இவற்றிற்கு தமிழ் அரசியலில் இனிஇடம் இல்லை. திருவாளர் குமார் பொன்னம்பலமும் இதை நேர காலத்தோடு அறிந்துகொள்வது மிகவும் நல்லது.

இன்னுமொன்று. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் நடக்கும் கருத்து மோதல்களால் அவர் ஏதேனும் இடையில் லாபம் சம்பாதிக்க நினைத்தால் அது நடக்கிற காரியமல்ல, அதை கனவிலும் நினைக்காமல் இருப்பது நல்லது.

நக்கீரன்

சாலையர் மேற்கொள்ளும்

# அங்கதப் பாட்டு ஆராய்ச்சி

கேலியும் கிண்டலும் குத்தலும் சாடலும் கலந்த நடையில் தனிமனிதர்களின் குறைகளையும் சமுதாயச் சீர்கேடுகளையும் எடுத்துக்காட்டி இடித்துரைப்பது அங்கதப் பாட்டு. அங்கதப் பாட்டு வகைக்கும் தமிழ் இலக்கியத்தில் நீண்ட வரலாறு உண்டு. கவி காளமேகமும் இரட்டைப் புலவர்களும் சில சித்தர்களும் அங்கதத்தை ஒரு தனிக் கலையாகவே வளர்த்து வந்துள்ளார்கள். இந்த வரலாறு, தமிழ்க் கவிதையில் வற்றாமல் தொடர்ந்து வருகிறது. இன்றைக்கும், தமிழ் கவிஞர்கள், (குறிப்பாக) கவியரங்குகளில், அங்கதத்தை மிகவும் நளினமாகக் கையாண்டு வருகிறார்கள்.

என்றாலும் தமிழ் இலக்கியத்தின் வேறு பல துறைகளில் போலவே, அங்கத இலக்கியத் துறையிலும் ஆழ்ந்து அகன்ற ஆராய்ச்சிகள் இன்னும் நடைபெறவில்லை. இந்தக் குறையைப் போக்கும் நோக்கத்துடன், தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் (டாக்டர்) சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய துணைவியார் டாக்டர் சாலினி அவர்களும் "தமிழில் அங்கதக் கவிதை" என்னும் தலைப்பில் ஓர் ஆராய்ச்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளார்கள். பல்கலைக்கழக மானியக்குழுவும் இந்த ஆராய்ச்சிக்குச் சிறிய அளவில் பொருள் உதவி செய்ய முன்வந்துள்ளது.

சாலையர் தங்கள் 1980 மே, சூன், சூலை தென்னகச் சுற்றுப் பயணத்தின்போது தமிழகத்தின் பல இடங்களிலும் உள்ள சுவடிச் சாலைகளில் இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான செய்திகளைச் சேகரிப்பார்கள்; ஆங்காங்கு உள்ள அறிஞர்களின் கருத்துக்களையும் திரட்டித் தொகுப்பார்கள். ஆயினும், தமிழர் இல்லம் தோறும், இதயம் தோறும் பரவிப் படர்ந்துள்ள அங்கதக் கவிதைக்குரலை ஒருங்கு திரட்டுவது அவ்வளவு எளிதல்லவே. எனவே, சாலையர், உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களின் இனிய ஒத்துழைப்பை விரும்பி வேண்டுகிறார்கள்.

உங்கள் உங்கள் பகுதிகளில் வழங்கும் அங்கதப் பாடல்களில் உங்கள் கவனத்துக்கு வந்தவைகளை, முழு விவரத்துடன் அவர்களுக்கு எழுதுங்கள். அங்கதப் பாடல்களைப் பற்றிய ஆராய்ச்சி ஏடுகள் / கட்டுரைகள் வெளிவந்திருந்து உங்களுக்கு எளிதாகக் கிடைத்தால் அவர்களுக்கு அனுப்புங்கள்; அல்லது, அவர்கள் வாங்கிக் கொள்வதற்கு வசதியாக, அவைகளைப் பற்றிய விவரங்களை அவர்களுக்குத் தெரிவித்து உதவுங்கள். எல்லாவற்றுக்கும் பின்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள்.

முனைவர் சாலை இளந்திரையன்
9ஏ/7, 'டபிள்யு. இ. ஏ.,
கரோல்பாக்
புதுதில்லி—110 005

Dr. Salai Ilanthiraian M. A. M. Litt. Ph. D.
9 A/7, W. E. A. Karolbagh,
New Delhi - 5.

அட்டைப்படக் கவிதை

## புன்னகை புரிகின்றாள்!

செப்புமுலைகள் குலுங்கிடவே
செவ்விதழ் ஓரம் மலர்ந்திடவே
அத்தானென்றே அழைக்கின்றாள்
அன்பே கொண்டு திளைக்கின்றாள்!
முத்தையினும் சிப்பியதாய்
முத்துப் பவள வாய்திறந்தே
அத்தானென்றே அழைக்கின்றாள்
அலைகடற் கன்னி சிரிக்கின்றாள்!
நித்தம் மடல்கள் குவிக்கின்றாள்
நினைப்பே அவளாய் தவிக்கின்றேன்
புத்தம் புதிய எழிலுடையாள்
புன்னகைதினமும் புரிகின்றாள்!

"காஞர்க்கவிஞ "

இ. சிவானந்தன், பேரம்பலம் லேன், பெரியமாவடி, சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: சுடர், சுதந்திரன, தீப்பொறி வாசித்தல், வானொலி கேட்டல், நண்பர்கள் தொடர்பு, சினிமா பார்த்தல்,

கே. சிவசங்கரநாதன், மே/பா, சிவம் மெடிக்கல ஸ்ரோஸ், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: கதைப் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசித்தல், வானொலி கேட்டல் சுடர் வாசித்தல்.

ந. ஜெயசூரி, இரணைக்குடிசை, F.45, சீமேந்துத்தொழிற்சாலை காங்கேசன்துறை.

பொழுதுபோக்கு: நாடகம் பார்த்தல், நடித்தல், புத்தகம் வாசித்தல், கடிதத் தொடர்பு, ரெலிவிஷன் பார்த்தல், டாம், ரேபிள் ரெனிஸ் விளையாடல்.

க. ராஜேஸ்வரன், C/o நீயூட்டன், 2ம் ஒழுங்கை(2nd Lane) Katubeddha.

பொழுதுபோக்கு: கரப்பந்தாட்டம், நீச்சல், வயரிங்.

எஸ். வரோநயன், மே/பா எம். சுப்பிரமணியம், அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.

பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்

என். எம். றிஸ்வி, 208, மூர் வீதி, மன்னார்.

பொழுதுபோக்கு: கிரிக்கெட், கரம், விளையாடல், பத்திரிகை புத்தகம் வாசித்தல்.

செல்வன் பூ. மன்மதன், மே/பா பூ. தேவராஜா, காட்டடைப்பு வீதி, காங்கேசன் துறை.

பொழுதுபோக்கு: பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாசித்தல், வானொலிகேட்டல், கிரிக்கட் விளையாடுதல், அறிஞர்களின் படங்கள் சேகரித்தல்.

மு. கா. மகேந்திரன், மே/பா திருமதி சி. கணபதிப்பிள்ளை, தும்பளை, பருத்தித்துறை.

பொழுதுபோக்கு: பத்திரிகைகள் வாசித்தல், வானொலி கேட்டல், கட்டுரை கதை கவிதை நாடகம் எழுதுதல், போட்டிகளில் பங்குபற்றுதல்.

செல்வி: சந்திரா, மே/பா பொ. மகேந்திரராசா, சின்னப்பூவரசன் குளம், புளியங் குளம்.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், முத்திரை சேகரித்தல், கதைப் புத்தகம் வாசித்தல், நண்பர் நண்பியர் தொடர்பு.

நா. இ. தாஸ், 15, ஆறுவது லேன், நெலும்புரு ரோட், இரத்மலானை.

பொழுதுபோக்கு: பேனா நட்பு, கதைப்புத்தகம் பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், திரைப்படம் மேடை கலைநிகழ்ச்சிகள் பார்த்தல்

## சுடர் வட்டம்

P. பிரேம்குமார், அரசினர் வைத்திய சாலை, ஓமந்தை

பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், உதைப் பந்து, கிரிக்கற் விளையாடுதல், நண்பர் நண்பிகள் தொடர்பு, கதைப் புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.

செல்வன் க. பேரின்பராசா, புதுக்குடியிருப்பு, 5ம் வட்டாரம் காத்தான் குடி.

பொழுதுபோக்கு: தத்துவ நூல்கள் படித்தல், நண்பர் நண்பியர் தொடர்பு.

க. மனோகரன், மே/பா. நா. வை. கனகரெத்தினம், கோணமலை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. கொக்குவில்.

பொழுதுபோக்கு: முத்திரை, சேகரித்தல், புத்தகம் வாசித்தல்,

சொர்ணு—வேலாயுதர், வந்தாறுமூலை, செங்கலடி,

பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, பத்திரிகை சஞ்சிகைகள் வாசித்தல், புகைப் படங்கள் எடுத்தல் வானொலி கேட்டல்.

என். கே. துரைசிங்கம், "அன்பகம்" கைதடி மேற்கு, கைதடி

பொழுதுபோக்கு: தமிழீழ ஆராய்ச்சி, கவிதை கட்டுரை கதை எழுதுதல் வாசித்தல் கரப்பந்தாட்டம்.

சு. வெற்றிநாதன், இல:1 டி 10 உருத்திரபுரம், கிளிநொச்சி.

பொழுதுபோக்கு: நாவல் கதை, கட்டுரை, கவிதை சினிமா.

பொ. சௌந்த், இல:24 படிவம் 1 சேமமடுக்குளம

பொழுதுபோக்கு: கதை கட்டுரை கவிதை எழுதுதல் வானொலி கேட்டல், சினிமா பார்த்தல் பேனா நண்பர், தொடர்பு

எஸ். ஐ. ஜெகதீசன், இராசையா வீதி, வேலணை கிழக்கு, வேலணை-5

பொழுதுபோக்கு: சுடர் சுதந்திரன் மற்றும் பத்திரிகைகள் வாசித்தல் வானொலி வெளிநாட்டு நண்பர் நண்பியர் தொடர்பு.

க. லோகேந்திரன், "பத்மவாசா" உரும்பிராய்.

பொழுதுபோக்கு: தமிழ் இலக்கிய ஈடுபாடு தரமான தமிழ் ஆங்கில படங்கள் பார்த்தல்.

வீ. சதாசிவம், இல:76 மெயின் வீதி புவாக்பிட்டிய

பொழுதுபோக்கு: சித்திரா சுடர் பத்திரிகை வாசித்தல் வானொலி கேட்டல்

நெற்றியில் ஊற்றெடுத்த வியர்வையினை......... வழித்தெறிந்தபடி ... உஸ் ... அப்பாடா... என்று திண்ணைக்கட்டிலில் குந்தினார் சுப்பிரமணிய குருக்கள், மனம் இடிந்துவிட்ட நிலையில், சோகபிம்பமாக அவரது முகம பிரதிபலித்தது: தூரத்தே...வரண்ட நிலத்தில் ஒரு பிடி புல்கிடைக்காதா என்று அலைந்து கொண்டிருந்தது அவரதுபசுமாடான லக்ஷ்மி. லக்ஷ்மியின் பின்னால், தாயின் துயரமும், துடிப்பும் அறியாத பச்சைக்கன்று துள்ளிஓடிவிளையாடிக்கொண்டு நின்றது.

சுப்பிரமணியக்குருக்களின் கண்ணில் நீர் முட்டிக்கொண்டு வந்தது.; அவரது இன்றைய நிலைக்கும், லக்ஷ்மியின் நிலைக்கும் என்ன ஒற்றுமை......!தனது வறுமைக்கும் மகள் பார்வதியின் வாழ்வுக்கும் வழிதேடி எங்கெல்லாம அலைந்தார்...... "தூ...நன்றிகெட்ட சமுதாயம் ......"அவரது அடிவயிறு நெருப்பை விழுங்கினாற்போல எரிந்தது.

"சுப்பிரமணியக்குருக்கள்... இனியும்...நம்மூர் கோயிலில் ூசவை செய்வதை நமது சங்கம் விரும்பவில்லை,... புதிய குருக்கள் ஒருவரை ஏற்பாடு செய்துள்ளோம்.... எனவே, குருக்கள் கோயில் சம்பந்தப்பட்ட பொருட்களை நாளை வரும் புதிய குருககளிடம் ஒப்படைக்க வேண்டும்......" கோயில் திருப்பணி சபைத் தலைவர் தணிகாசலம், வன்மம் நிறைந்த மனதோடு முழங்கினார். பாவம்; அவரது செல்வாக்கு, சுப்பிரமணியக்குருக்களின் சார்பாக யாரையும் பேசவிடாத மௌனத்தால், சபையின் அங்கீகரிப்பு என்ற போர்வையில் நிறைவேறியது.

ஆத்திரமும் அழுகையும் அவமானமும் குருக்களை கூறு போட்டுபிடுங்கின. அவரது உடலில் நடுக்கமேற்பட்டது. சபையினர் புதிய பிராணி ஒன்றை அதிசயமாகப் பார்ப்பதைப் போல பார்த்தனர்,... "அன்புள்ளவர்களே!...இந்தஊருக்கு குறிப்பாக தணிகாசலப் பெரியவருக்கு இப்போது வேண்டாதவன், அப்பன் முருகன் மேல் ஆணையாக யாருக்கும் நான் தீமையே நினைத்தவனல்ல, ஆனால், இப்படியான தீர்மானம் ஏன் கூட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது என்பதையும்,யாரால்நிறைவேற்றப்பட்டது என்பதையும்,நான் அறிவேன். அந்த ஆண்டவன் அறிவான், கோயில், எல்லோருக்கும் பொதுவானது; சமத்துவமானது அந்தபுனித இடத்திலே, உயர்வு, தாழ்வு, ஏழை




பணக்காரன், படுமுட்டாள், அறிவாளி என்ற பேதமோ? ஜாதி, பிரிவினைகளோ? இல்லை, ...மாடிவீட்டு தணிகாசலப் பெரியவரும் ஒன்று தான், குடிசை வாசி குப்புசாமியும் ஒன்றுதான்.

...யார் மேலும் பழிசுமத்துகிறேன் என்று நினைததுவிடாதீர்கள்.... என்னை யார்? என்று கேட்காமலே வரவேற்று, உபசாரம் செய்ததும் நீங்கள் தான், இப்போது வெறுத்து, வெளியேற்றி வேடிக்கை பார்ப்பவர்களும் நீங்கள் தான்,...எனக்கு வழிகாட்ட எனது அப்பன் முருகன் இருக்கிறான்... நான் வருகிறேன்'... சகலரும் நலமாக வாழ ஆண்டவன் அருள்புரியட்டும்," குரல் தளதளக்க கூறிவிட்டு தள்ளாடி நடந்து வந்தார், சுப்பிரமணியக்குருக்கள்.

இந்த பூங்கேணி கிராமம், அவர் குருக்களாக வந்த பின்தான் பக்தியிலே மனம் வைத்தது! காலை, மாலைகளில், தேவார திருவாசகங்களை பிள்ளைகளுக்கு போதித்தார். அப்பன் முருகனின் திருவிளையாடல், சூரசம்மாரம், வள்ளி-தெய்வானை மணங்கள், என்பவைகளை பொது நிகழ்ச்சிகளிலே உணரவைத்தார். குருக்களாக ஆசிரியனாக, பக்திமானாக, தன்னை மாற்றி அல்லும் பகலும் பூங்கேணி கிராம வளர்ச்சிக்கு தன்னையே அர்ப்பணம் செய்து, வறுமையின் பிடியிலே தத்தளித்தாலும், நல்ல நெறிகளிலே மக்களை இட்டுச் செல்ல முனைந்தவருக்கா?... இந்த நன்றி கொன்ற பரிசு!!

அப்படி என்ன? தவறு செய்து விட்டார்?... ஆலயபரிபாலன சபைத்தலைவர் தணிகாசலமும், வரிசையிலே, பொதுமக்களோடு நின்று பூஜைப்பொருட்களை தரத்தானே சொன்னார்,...... அவருக்கு மட்டும் தனியான, விசேட பூஜை செய்ய முடியாது என்று நீதியைத்தானே சொன்னார் அதுதான் அவர் செய்தகுற்றமா? தர்மம், நீதி' நேர்மை, சமத்துவம், என்றெல்லாம் வாய்கிழிய, நாட்கணக்கில் பேசுகிறவர்கள், ஆலயம் அனைவருக்கும் சமமானது என்று தத்துவம் பேசு

கிறவர்கள், தணிகாசலத்துக்கு முன்பு தவம் செய்து நின்று பூஜைப்பொருள் தந்த சலவைத் தொழிலாளி பொன்னனை ஏன் மறித்தார்கள். அவனை ஏன் தள்ளிச் சென்று பின்னால் நிறுத்தினார்கள்,...... சமூகத்திலே ஓர் அங்கம் தானே அவனும், இந்த ஊரின் வளர்ச்சியிலும் வீழ்ச்சியிலும் பங்கெடுத்தவன் தானே! எல்லோரையும் போல ஆலயவரி கொடுத்தவன்தானே!...... அவனுக்கு ஏன் விதிவிலக்கு!! என்று உண்மையைத்தானே உணர்த்தினார், அவருக்கா? இந்த நிலை.

ஊரார் கொடுக்கும் சிறு தொகையில், பட்டினிகிடந்து, முருகன் தொண்டே முதற் தொண்டு என்று வாழ்ந்தார். மணக்கோலத்திலே மகளைப் பார்க்கும் காலம் வராதா? என்று ஏங்கினார். தம்மனைவி பரிமளத்தைப் பீடித்துள்ள நோய்மாறாதா? என வாடினார்.......தனது நிலையால் முருகனின் கடமைகள் சிதறக்கூடாதே என்றுமனதை ஒரு நிலைப்படுத்தி இதுவரை சேவை புரிந்து, விடிவை நோக்கிய கண்களுக்கா? இந்த இருள் போர்வை!!

குருக்களின் கண்ணில் முடியநீர், கரைகடந்து, இமை தாண்டி.........பொல பொலத்தது! கேணித்துறையில் கிடந்த தென்னங்கட்டையில் அமர்ந்தவாறு வெறுமனே காட்சிதந்த முருகன் கோயிலைப்பார்த்தார். கண்ணென்று ஒலிக்க வேண்டிய பகல்பூஜைக்கான காண்டாமணி பரிதாபத்தோடு தொங்கிக் கொண்டிருந்தது.

குருக்களின் மனம் துடித்தது. "சாம்பலாய் மறையப் போகும் மனிதர்களுக்காக சத்திய மூர்த்தியை ஆராதிக்காமல், விடுவதா?... கோயிலுக்கும் தனக்கும் சம்பந்தமில்லாவிட்டாலும், குமரன் மீது கோபப்படுவதா?..."கடவுளே! இதென்ன சோதனை!... இது உனக்கு ஏற்பட்ட கறையா? எனக்கு ஏற்பட்டதா?... என் கைகள்கட்டப் பட்டிருக்கிறதே? என்ன செய்வேன்" அவர்மனம் ஓலமிட்டது!! ஒரு பிரளயமே, சூறாவளியே வீசி அவரை வதைத்தது!! ஆண்டவனே!... உனது பூஜைக்கானவேளை தவறுகிறதே! அனைத்து உயிர்களையும் காத்து ரட்சிக்கும் நீ ஏனோ? என்னிடத்திலே ஊமையானாய்! நெஞ்சிலே, நீதியற்றவர்களுக்குத்தான் நீயா?...

மனிதனா? தெய்வமா? என்னும் பெரும் போராட்டம், முடிவில், அவரது கடமையை வெல்லச் செய்வதைப் போல..."ஐயா..." என்ற பணிவான குரல் கேட்டுத்திரும்பினார், குருக்கள்.

கண்ணீரோடு நின்றிருந்தான் பொன்னன், "ஐயா!... எல்லாவற்றையும் கேள்விப்பட்டேன்... எனக்காக நீங்கள், பழிவாங்கப்பட்டதை நினைக்கையில்..." சொற்களை முடியாமல் குலுங்கி அழதான் பொன்னன், "இந்த ஏழையை மன்னித்து விடுங்கள்," அவர் காலிலே வீழ்ந்து வணங்கினான்.

"பொன்னா?... என்னப்பா இதெல்லாம்,...நான் உனக்கா

## சிறுகதைப் போட்டி

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறுகதைப் போட்டி ஒன்றினை நடத்த நாம் தீர்மானித்திருக்கிறோம். பங்கு பற்ற விரும்புபவர்கள் 30-6-80க்கு முன் தமது சிறு கதைகளை அனுப்பிவைக்கவேண்டும். கதைகளை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சுடர் சிறு கதைப்போட்டி' என குறிப்பிடுதல் அவசியமாகும்.

★ ஒருவர் எத்தனை கதைகளையும் அனுப்பிவைக்கலாம்.

★ பெயரும் விலாசமும் தனியான கடதாசியில் எழுதப்பட்டு கதையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

★ புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கம் மாத்திரமே தெளிவாக எழுதப்பட்டு 8 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

★ போட்டி சம்பந்தமாக எமது முடிவே இறுதியானது.

எவ்வித கடிதப் போக்குவரத்தும் இது சம்பந்தமாக வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

முதற் பரிசுக்கதைக்கு —100 ரூபா
இரண்டாம் பரிசுக்கதைக்கு — 50 ரூபா
மூன்றாவது பரிசுக்கதைக்கு— 25 ரூபா
வழங்கப்படும்.

நக்கீரன், 'அரி' இருவரும் பரிசீலனையாளர்களாக இருப்பார்கள்.

இந்தச் சிறுகதைப் போட்டியை நடத்துவதற்கு உறுதுணையாக, பெயரைக் குறிப்பிட விரும்பாத அன்பர் ஒருவர் 100 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார். அவருக்கு எமது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அனுப்பவேண்டிய முகவரி:

'சிறுகதைப் போட்டி'
சுடர்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

கவோ? தணிகாசலத்துக்கா கவோ? செய்யவில்லை, பேசவில்லை, ஆண்டவன் நியதி, நீதி அதுதானே அப்பா!...அது தண்டிப்பதற்கான குற்றமென்றால, அதற்கு நீயோ? நானோ? வருத்தப்பட வேண்டியது இல்லை! வருத்தப்பட வேண்டியவன் அவன்,'' முருகன் கோயிலை சுட்டினார் சுப்ரமணியக்குருக்கள்!!

தூரத்தே!... பல தலைகள் தெரிந்தன....முதல் தணிகாசலமும், பின்னால் புதிய குருக்களும் இன்னும் சிலரும் கோயிலுக்குள் சென்றார்கள். "ஐயா! ...புதிய குருக்களை கொண்டு வந்து பூஜை செய்யப் போகிறார்கள், ஆண்டாண்டுகாலமாக இந்த கோயிலுக்கே தொண்டு செய்தவர் நீங்கள்... நீங்கள் அசைத்தமணியை வேறொருவர் அசைக்கவிடமாட்டன்,.... எனது பாட்டன், அப்பன், பரம்பரைகள் இந்தக்கோயிலுக்கு கல் சுமந்து கொடுத்தவர்கள், வரிப்பணம் கொடுத்தவர்கள், இந்தக் கோயிலிலே எனக்கும் பங்கு, உரிமை இருக்கிறது. பூஜை நடத்தவிடமாட்டன்" பொன்னன் வீறுகொண்ட வேங்கையாக நின்றான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவனது உடல் நடுங்கிற்று!! முகம் ஜிவுஜிவுஎன்று சிவக்கத் தொடங்கிற்று! "பொன்னு!... ஆத்திரப்படாதே!... அவர்கள் செய்தென்ன, நான் செய்தென்ன பூஜை அந்த அப்பனுக்குத் தானே! தடுப்பது பெரும் பாவம்... சும்மாயிரு''... சுப்ரமணியக்குருக்கள் பதறிப் போய் அவனைப் பிடித்தார்.

"இல்லை!... இவர்கள் உங்களுக்கு செய்த துரோகத்துக்காக! முருகனின் ஒரு வேளைப் பூஜை நிறைவேறாது போனால், குன்றேறும் குமரன் கோபிக்க மாட்டான்! என்னை விடுங்கள்,'' அவரிடமிருந்து திமிறி, விடுபட்டவனாக, வெறிபிடித்தவனாக கோயிலை நோக்கி ஓடினான் பொன்னன். எழுந்து விட்ட புதுவெள்ளத்தை தடுத்து நிறுத்த முடியாதவராகப் "பொன்னு?.......... பொன்னு.. என அலறியபடி பின்னால் ஓடினார், குருக்கள்.

திடுமென உள்ளே நுழைந்த பொன்னன் நேராக காண்டாமணி கயிற்றை சுற்றிப்பிடித்திருந்த தணிகாசலத்தாரிடம் சென்றான். "விடுங்கள் கயிற்றை!!... இந்தப் பூஜையை நடத்த விடமாட்டன், குருக்கள் ஐயாவைத் தவிர யாரும் வரக்கூடாது!..." சடாரென மணிக்கயிற்றைப் பறித்து எடுத்த பொன்னன்

"எச்சில் பொறுக்கியிடம் வரிவாங்கலாம், சங்கத்தேர்தல்கள் வந்தால் ஓட்டுக் கேட்டு நாயாக அலையலாம். வேறு ஊர்க்காரரோடு சண்டைகள் ஏற்பட்டால் ஒன்றுபடுங்கள் என்று குரல் கொடுக்கலாம்...ஆனால், கோயிலிலோ? சபைகளிலோ,? கல்யாண வீடுகளிலோ? கடை, தெருக்களிலோ? பின்னுக்குத்தள்ளி அவமானப்படுத்தலாம், என்ன!...இனியும் உங்கட அதிகாரம், ஜாதிவெறி, செல்லாது, செல்லவும் விடமாட்டம்''

## 'கல்கி' மெச்சிய இடியப்பமும் சொதியும்!

1948 ல், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் மாநாட்டின், இறுதிநாள் நிகழ்ச்சிகளின் போது, பேராசிரியர் 'கல்கி' அவர்கள் நன்றி கூறும் வைபவத்தை ஏற்று மிகத் திறமையாக நிறைவு செய்தார்கள் நகைச் சுவையாகப் பேசி எல்லோரையும் விழுந்து விழுந்து சிரிக்க வைத்தார்கள்.

ஒரு கட்டத்தில் அவர் பேசும்பொழுது: "யாழ்ப்பாணத்து அன்பர்கள் விருந்தோம்பலிற் சிறந்தவர்கள்; அவர்களின் விருந்தோம்பும், பண்பும் உபசாரமும் எம்மையெல்லாம் வெகுவாகக் கவர்ந்து விட்டது. சிறப்பாக இங்கு எமக்குச் சிற்றுணவாகப் பரிமாறப்பட்ட இடியப்பமும், சொதியும் மிக மிகச் சுவையாக இருந்தது. இந்த இடியப்பமும், சொதியும் தமிழ் நாட்டினராகிய எமக்குப் புதியவையாகும்'' என்று கூறினர்.

தகவல்: கதிர் மாணிக்கம்.

நிதானமாக, எச்சரிக்கையாக சொன்னான்.

தணிகாசலம் அதிர்ச்சியும், ஆத்திரமும் கொண்டவராக "அடேய்!...... ......... விடடா கயிற்றை! எச்சில் பொறுக்கி, கோயிலுக்குள் யாரடா? வரச் சொன்னது ............ போடா வெளியே'' பருத்த சரீரம் குலுங்க கத்தினார். மீசையில் ஒருவித துடிப்பு ஏற்பட்டிருந்தது மற்றவர்கள் வாயடைத்து நின்றனர்.

பொன்னன் உறுதியாகச் சொன்னான் அவனது நரம்புகள் புடைத்து, நெஞ்சு நிமிர்ந்து, நியாயங்கேட்கும் விடுதலை வீரனைப்போல நின்றான்.

"என்னடா!......... சொன்னனீ... நாய் யாருடா... வேட்டியை மடித்துக் கட்டி முன்னுக்கு வந்த தணிகாசலம் திடீரென்று பொன்னனைப் பிடித்து தள்ளினார். இதைச் சற்றும் எதிர்பாராத பொன்னன் கால்இடறி பின் புறத்து

சுவரிலே "படீரென" மோதுண்டான்.

மோதிய வேகத்தில் தலை அடிபட குபீரென இரத்தம் கொப்பளித்து தரையை முத்தமிட்டது. ஏதோ? நடக்கப்போகிறது என்றுஇதுவரை கோயில் வாசலிலே நின்ற சுப்பிரமணியக் குருக்கள் ':பொன்னு''?... என்று அலறியபடி பாய்ந்து பொன்னனை தாங்கிக்கொண்டார். அவரது வெள்ளைவேட்டி சிவப்பாகியது.

பொன்னன் தள்ளாடி, நிமிர்ந்தான்!... "ஐயா!......... சமத்துவத்துக்கும், சம உரிமைக்கும், இதைவிட எத்தனை துளி இரத்தம் வேண்டுமானாலும் சிந்தத்தயார்! ..'' அவனது பார்வை......... மங்கியது......'' "புதிய குருக்கள் ஐயா!...... உங்களை நான் வெறுக்கவில்லை, ஆனா ......... நேற்று நடந்த பூஜைக்கு! எனது பொருட்களை வாங்கவிடாமல் பின்னுக்குத் தள்ளி ஏசினார், தாழ்ந்த ஜாதிக்கென்ன பூஜை என்று கேட்டார், இந்தப் பெரிய மனிதர், அவரை எதிர்த்தார் குருக்கள் ஐயா, ஆண்டவன் சந்நிதானத்தில் பேதம் இல்லை என்று சொன்னதற்காக, இவரைகோயிலை விட்டு வெளியேறவைத்தார்கள்இவர்கள்... இவர்கள் செய்தது சரியென்றால்,...குருக்கள் பேசியதுகுற்றமென்றால், நீங்கள் பூஜையை தாராளமாக நடத்தலாம்,..,'' அவனது குரல்... மங்கியது... மயக்கம் அவனை துவண்டு விடவைத்தது!!

எல்லோரையும் ஒருமுறை பார்த்தார் புதிய குருக்களான சாம்பசிவ ஐயர், அவர் மனதில் பல நெளிவுகள் சுழன்றன!!...

சாதனையொன்றை செய்து விட்ட வீரனைப்போல இடுப்பில் கைகுத்தி நிமிர்ந்து நின்றார் தணிகாசலம் "டேய்...... இவனை இழுத்து வெளியே போடுங்க!!......... இதெல்லாம் கழுவி துடைங்கடா... ஐயா! நீங்க பூசையை தொடங்குங்க... நேரமாகிவிட்டுது...... அவரது பேச்சு கட்டளை இடுவதுபோல இருந்தது. சலனமில்லாத தெளிவோடு, சாம்பசிவ ஐயர் தலைநிமிர்ந்தார்.

"மன்னிக்க வேண்டும்...... இந்தக்கோயிலில் இனியும் நான் பூஜைசெய்தால், நிச்சயமாக நரகம்தான் கிடைக்கும்,... நான்வேறுசுப்பிரமணியக்குருக்கள் வேறாக இருந்தாலும் எமது எண்ணம், நிலைப்பு, செயல், வழி எல்லாமே ஒன்றுதான், மனச்சாட்சிக்கு விரோதமாக, நீதிக்கு, தர்மத்துக்கு, ஏன்? இந்த ஆண்டவனுக்கு விரோதமாக நடக்கமாட்டேன்!!......'' அமைதியாக சொல்லிவிட்டு, பொன்னனின் அருகில் நின்று கலங்கிய சுப்ரமணியக்குருக்களின் கையைப்பிடித்தார்......... "என்னில் குறை நினைக்கவேண்டாம், இப்படிப் பிரச்சினை என்று தெரிந்திருந்தால் இந்த ஊரிலே என்காலடி பட்டிருக்காது...... மிருகங்கள் மனிதருபங்களில் நடமாடும் இந்த ஊரில் இருக்காதீர்கள்,... என்னுடன் வரவிரும்பினால்... புறப்படுங்கள்'' சாம்பசிவ ஐயர் கண்ணில் கனல் தெறிக்கச் சொன்னார். சுப்பிரமணியக்குருக்கள் மரத்துப் போய் நின்றார்.... என்ன பேசுவது எனத் தோன்றாதவராக தடுமாறினார்.

கோயில் பூஜை, இதுவரை ஏன் நடக்கவில்லை, என்ற புரியாத புதிரோடு கோயிலுக்குப் படை எடுத்த பூங்கேணிகிராம மக்கள், கோயிலிலும், கூட்டத்திலும் நடந்த சேதியறிந்து குசுகுசுத்தபடி கும்பலாக நின்று உள்ளே நடப்பவைகளை கண்டார்கள்,! சாம்பசிவஐயர் திடீரென இப்படி நடப்பார் என சற்றும் எண்ணாததணிகாசலம், எதிர்பாராத இடியால் தாக்குண்டு நிலைகுழம்பிப் போனார். மதிய பூஜைக்கு இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன. காண்டாமணி ஒலித்து... ஓய்ந்திருக்க வேண்டியவேளை!! பொதுமக்களுக்கு என்ன சொல்வது என்று திண்டாடினார்! எல்லோரும் தம்மைப் பற்றியே குறையாக முணுமுணுப்பதும் இலேசாக கேட்கவே! அவர் பதட்டமடைந்தார்.

சேதிகேட்டு ஓடிவந்த பொன்னனின் மனைவி கண்ணம்மா ஒப்பாரிவைக்கத் தொடங்கிவிட்டாள். பொன்னன் இன்னும் மயங்கியபடியே கிடந்தான்,!!

தீர்க்கமான முடிவெடுத்த சுப்பிரமணியக்குருக்கள் ......... மெல்ல வெளியே வந்தார். சாம்பசிவ ஐயரும் பின்தொடர்ந்தா ..."நில்லுங்க''.. கூட்டத்தை விலக்கியபடி தேவன் வந்தான்.. ... அவன் புதுமைவிரும்பி! இளையதலைமுறையினன். மேற்படி பிரச்சினைகளுக்கு அவ்வூரிலே இருந்திருந்தால், இப்படி பெரிய பூதாகரமாக வளர விட்டிருக்கமாட்டான்! தணிகாசலத்தின் தங்கையின் மகன், பொதுவுடமை சோசலிச, தத்துவங்களிலே ஊறித்திளைத்தவன். மாமனாரின் சின்னத்தனமான ஈனச்செயல்கள் கட்டோடு பிடிப்பதில்லை அவனுக்கு. அவன் பல்கலைக்கழகத்திலே படிக்கவில்லையென்றாலும் பல்கலைகளிலே தேர்ச்சி பெற்றவன்..

சுப்பிரமணியக்குருக்கள் நின்றார்......."கேவலம்! சாதாரண ஒரு மனிதனின் சுயவிருப்புக்காகவும், செருக்குக்காகவும், அந்த இறைவனின் பூஜையையும், பூஜைக்காக இவ்வளவு நேரமும் காலகடுக்க காத்திருந்த மக்களையும், வெறுத்து விட்டுப் போகிறது தான நீதியா?...... வேளைதவறாமல் பூஜை நடந்தகோயில் இது,... நடநததை இப்போதுதான் அறிந்தேன்!''... என்று சொல்லி விட்டு திரண்டிருந்த மக்களை நோக்கினான். "நடந்து முடிந்த விஷயங்கள் உங்களுக்குத தெரியும்,... தணிகாசலம் என்னும் ஜாதிப்பிரியர், வேண்டுமா? இந்த முருகன் ஆலயப் பூஜை வேண்டுமா?'' என உரத்துக் கத்தினான்!! 'பூஜை...... பூஜைதான் வேண்டும்! அப்பன் முருகன்தான் வேண்டும்'' சனக்கூட்டத்தின ஒருமித்த குரலோசை...வானில் எழுந்து, பரந்து விரிந்தது......

"குருக்கள்... ஐயா......மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. உங்கள் மனம் புண்பட்டிருந்

# பதில்கள்

## நக்கீரன்

தயா—தயேந்திரன், அச்சுவேலி வடக்கு.

கேள்வி: தந்தை செல்வாவின் நினைவாலயத் திறப்பு விழாவில் திரண்டிருந்த தமிழர் வெள்ளத்தை ஜே. ஆர். நேரில் கண்டிருந்தால் என்ன நினைப்பார்?

பதில்: தமிழினம் நன்றியுள்ள இனம் என்று எண்ணியிருப்பார்.

கேள்வி: தற்போது தமிழீழத்தை ஆதரித்துப் பேசி வரும் குமார், தமது தந்தையின் வழியைப் பின்பற்றி த. வி. கூட்டணியில் சேருவார் என்று எதிர்பார்க்கலாமா?

பதில்: சந்தர்ப்ப அரசியல் வாதிகளுக்கு ஒரு விடுதலை இயக்கத்தில் இடமில்லை.

க. சிவசங்கரநாதன், தெய்வங் கேணி வீதி, சரசாலை

கேள்வி: 1956ம் ஆண்டுக்கு பின் நியமனம்பெற்ற தமிழ் அமைச்சர்களிலும் பார்க்க 1970ம் ஆண்டு ஸ்ரீலங்காக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகித்த செ. குமாரசூரியர் அவர்கள் செய்த சேவையை யாரும் மறக்க முடியாது. ஆனால் அவர் தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையே கண்டிக்கிறார். அவர் ஓர் கட்சி அமைக்கப் போகிறாராம். அது வளர்ச்சி பெறுமா? தங்கள் கருத்து என்ன?

பதில்: செட்டிக்கு வெள்ளாண்மை ஜென்மத்துப்பகை. குமாரசூரியர் தனது என்ஜினியர் வேலையோடு நிறுத்திக் கொள்வது அவருக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது.

கேள்வி: நக்கீரரே — தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கிய உறுப்பினர் சிலர் சமாதான நீதிபதி பட்டம் பெற்றுள்ளனரே. அவர்கள் அதனால் சாதிக்கப்போவதுஎன்ன? தமிழ் ஈழ இலட்சியத்திற்கு இடையூறு அல்லவா? ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கு விசுவாசம் தெரிவித்து சமாதான நீதிபதி பட்டம் ஏன் பெறுவான்? தங்கள் கருத்து என்ன?

பதில்: சமாதானப் பட்டம் பெற்ற கூட்டணித் தலைவர்கள் சிலர் அந்தப் பட்டத்தை வைத்துக் கொண்டு சில சத்தியக் கடுதாசிகள் — பாரங்கள் இவற்றிற்கு கையெழுத்துப் போடுவதுதான் அவர்கள் கண்ட பலன் என்று நினைக்கிறேன். விடுதலையை நாடி நிற்கும் ஒரு இனம் இப்படியான சில்லறைப் பட்டங்களை நாடாதிருப்பதே நல்லது. அப்படி இல்லையென்று நாடி நிற்பது தமிழ்ஈழஇலட்சியத்திற்கு முரண் என்பதும் என்கருத்து. கூட்டணி தலைமைப்பீடம் இது பற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டும். நிற்க அம்மா ஆட்சிக் காலத்தில் தூக்கி வீசப்பட்ட இப்பட்டம் ஐயா ஆட்சிக்காலத்தில் எப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது புதிராக இருக்கிறது.

க. சிவசங்கரநாதன், கச்சாய் வீதி, சாவகச்சேரி.

கேள்வி: நக்கீரரே, 1978ம் ஆண்டு ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி எப்போது நிறைவேற்றும்?

பதில்: சதுரங்கப் பலகையில் தற்சமயம் காய்களை நகர்த்துகிற வேகத்தைப் பார்த்தால் இன்னும் கால் நூற்றாண்டு செல்லும்போல் தெரிகிறது. 1972—77ம் ஆண்டுக் கிடையிலான போராட்ட வேகத்தை வைத்து முன்பு இலட்சியம் நிறைவேற 10 வருடம் போதும் என்று நினைத்திருந்தேன்.

எஸ். எம். உவைஸ், 92 ஆலடி வீதி, மருதமுனை—1

கேள்வி: தமிழ் நாட்டுக் கோரிக்கை வெற்றி பெறுது என எண்ணுகிறேன்?

பதில்: வெற்றியும் தோல்வியும் எமது மன உரத்தைப் பொறுத்தது. இதய சுத்தி, இலட்சிய வெறி, தியாக மனப்பான்மை இவை இருந்தால் தமிழ் ஈழக்கோரிக்கை வெற்றி பெறுவது நிச்சயம். ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின் றித் தாழாது ஞாற்றுபவர் என்

---

தால், அவர்கள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்....... பூஜையை நடத்துங்கள்,'' தேவன் பணிவாக கூறிவிட்டு கோயிலைப் பார்த்தான், குன்றிப்போன உடலோடு குனிந்ததலை நிமிராமல் பின்கதவால் சென்று கொண்டிருந்தார் தணிகாசலம். காண்டாமணி அதிர்ந்தது. ஓசைகேட்டு எழுந்தான் பொன்னன். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. சுதந்திரம் பெற்றதைப் போல துள்ளிக் குதித்து கோயிலுக்குள் ஓடினான்.

தீண்டாமையின் சாவுமணியாக காண்டாமணி ஒலித்துக் கொண்டிருந்தது.

(கற்பனையே)

பது வள்ளுவர் வாக்கு.

சாஹிப். எம். பைஸால், 48D/1 ஆலையடி வீதி, மருதமுனை—1 கல்முனை.

கேள்வி: புரட்சிவாத மன்னர் ரோகண விஜய வீரா தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவரது கொள்கைபற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்! ஆனைமடுவில் ஆனை மிதித்ததால் அரசியல் சுகயீனத்தில் இருப்பதாகக் கேள்வி. மக்கள் விடுதலை முன்னணி தன்னை ஒரு இடதுசாரி இயக்கம் என்று கூறுகிறது. மாக்சிச லெனினிசமேதனதுபாதைஎன்கிறது. ஆனால் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை ஒத்துக் கொள்ள மறுக்கிறது.

ஒரு நாட்டின் தேசிய சிறுபான்மை இனங்களின் ஒத்துழைப்பின்றி சோசலிச புரட்சியை ஏற்படுத்துவது இயலாத காரியம். மக்கள் விடுதலை முன்னணி ஏனோ இப்பாடத்தை மறந்துவிட்டது.

அன்புதாஸன், நியூபர்க்குரூப், எல்ல

கேள்வி! "நாளுக்கு நாள் உயரும் விலைகளால் யாருக்கு வாசி?

பதில்: வாசி வியாபாரிகளுக்கு. காரணம் விலைவாசி உயர்வுக்கு ஏற்ற விகிதத்தில் அவர்களது இலாபமும் உயர்ந்து கொண்டு போகும். திண்டாட்டம் சம்பளத்தை மட்டும் நம்பிவாழும் நடுத்தர மக்களுக்கு.

கேள்வி: உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்கென்று ஒரேயொரு சொந்த நாடேனும் இல்லாமல் "நாடோடி"யானது ஏன்?

பதில்: இந்தக் கேள்விக்குப் பதிலாக ஒரு பெரியபுத்தகமே எழுதலாம். சுருக்கமான பதில் தன்னைப் பெரிய புத்திசாலி என்று நினைக்கிறான் தமிழன். உண்மையில் நடைமுறையில்—இழித்த வாயனாக இருக்கிறான். சுயநலம் ஒற்றுமை இன்மை, எளிதில் நம்பிக் கெடுகிற குணங்களே தமிழனை 'நாடில்லாத' அனாதையாக்கிவிட்டது.

வே. லோகேஸ்வரன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்

கேள்வி: அமெரிக்கக் காங்கிரசிலும் (நாடாளுமன்றம்) இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்கு எழுத்து மூலமான பிரேரணை கொடுக்கப்பட்டிருப்பது பற்றி.............

பதில்: விடுதலை இயக்கப் போராட்டத்தில் இன்னொரு மைல்கல். ஆனால் இங்கே என்ன நடக்கிறது. மற்றவர்கள் விழித்துக் கொள்ளும் பொழுது நாங்கள் தூங்கிவிட்டோமே!

கேள்வி: குமுதம், இதயம் பேசுகிறது ஆகிய சஞ்சிகைகள் மத்தியில் இந்திரா காங்கிரசை ஆதரிக்க வேண்டுமென்றும், ஆனால் தமிழகத்தில் கலைஞர் அவர்கள் தலையெடுக்கக் கூடாது என்ற தோரணையிலும் எழுதிவருகிறார்களே. இதை கலைஞர் அவர்கள் கவனிக்கவில்லையா?

பதில்! கலைஞர் நிச்சயம் கவனித்திருப்பார். குமுதம் தலையங்கத்தை நானும் படித்தேன் தமிழ் நாட்டில் தோன்றிய திராவிட பேரியக்கத்தின் பலனாக பார்ப்பனீயம் பெருமளவு அழிக்கப்பட்டுவிட்டது. பார்ப்பனீயத்தின் எச்சசொச்சமே குமுதம் இதயம் பேசுகிறது போன்ற சஞ்சிகைகள். தமிழனையும் — தமிழனையும் மோதவிட்டு பிரித்தாளப் பார்க்கிறார்கள்.

கலைஞர் பச்சைத் தமிழன் எனவே இந்தப் பார்ப்பனீய அடிவருடிகளுக்கு அவரை கண்ணில்காட்ட முடியாது இருக்கிறது.

மாநிலத்தில் எந்தக் கழுதையும் ஆட்சிக்கு வரலாம். ஆனால் கலைஞர் வரக்கூடாது. இதுதான் அவர்களது கொள்கை. அதற்கு தற்காலிக வெற்றியும் கிட்டியிருக்கிறது.

வ. கமலேஸ்வரி, பருத்தித்துறை வீதி, சரசாலை.

கேள்வி: நக்கீரரே 1977ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எமது இறுதித் தேர்தல் இதுவெனக் கூறிவிட்டு அதை மறந்து உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்டனர். 1983ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அவர்கள் போட்டியிட்டால் 1977இல் கூறியதை மீறுவதல்லவா? மக்கள் இவர்களைப் பற்றி என்ன கருதுவார்கள்? இதுபற்றி தங்கள் கருத்து யாது?

பதில்: சொன்னதில் தவறில்லை. அது ஒரு எதிர்பார்ப்பு ஆனால் செயலில் வேகம் இல்லாததுதான் பெரிய குறை.

கேள்வி; த.வி. கூட்டணிக்குள் ஏற்பட்டிருக்கும் கருத்து மோதல்களால் அதன் செல்வாக்கு மக்கள் மத்தியில் குறையும்போல் இருக்கிறதே?

பதில்! தமிழர் விடுதலைக் கூட்டணி முழுக்க—முழுக்க ஒரு மக்கள் இயக்கம். தலைமை மோதலால் செல்வாக்கு குறைய நியாயமில்லை,

பொ. மகேந்திரராசா, வன்னியூர்.

கேள்வி: விடுதலைவேட்கை கொண்டு இருக்கும் இவ்வேளையிலும் யாழ்ப்பாணம், வன்னி என்று பிரிவு படுத்தி கதைக்கும் தமிழரை என்னவென்று அழைக்கலாம்?

பதில்: எங்களுக்குள் இருக்கும் ஐந்தாம் படை என்று அழைக்கலாம்

கேள்வி பதில்
மே/பா சுடர்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

நூல் விமர்சனம்

# வாகரைவாணனின் 'தமிழ்ப்பாவை'

— அன்புநெஞ்சன்

அண்மையில் ஈழத்து பத்திரிகையுலகில் தொடர்ந்து வெளிவந்து பல இலக்கிய உள்ளங்களைக் கொள்ளை கொண்ட "ஈழமகள் கண்ணீர்", "சித்திரைப் பாவை" போன்ற நீள் கவிதைகளை வாசக நெஞ்சங்கள் மறந்திருக்க மாட்டா. இந்த வரிசையில் கவிஞர் "வாகரைவாணன்" அவர்களினால் தமிழ் கூறும் நல்லுலகில் தவழ விடப்பட்டுள்ள மற்றுமொரு கவிதைப் பன்னீரே-இந்த தமிழ்ப்பாவை நீள்கவிதையாகும்.

சிந்தனை வெளியீட்டின் ஊடகம் உரை நடையாயின் - உணர்ச்சி வெளியீட்டின் ஊடகம் கவிதையாகும். ஆனால், வரலாற்று ரீதியான ஒரு விடயத்தை, நாம் விளக்க எத்தனிக்கும் போது கவிதையிலும் பார்க்க உரை நடையே மிகச் சிறந்த ஊடகமாகும் என்பது எனது கருத்தாகும். ஆனால், தமிழ்ப்பாவையின் வரலாறு வெறும் சரித்திரச் சான்றுகளுடன் மட்டும் தொடர்புடைய விடயமொன்றல்ல. அது உணர்வுகளுடனும், விடுதலை வேட்கைகளுடனும் பின்னிப் படர்ந்த தொன்று. இதனைக் கவிஞர் கவிதையில் வடித்த போது பின்வரும் இரண்டு பிரதான பிரச்சினைகளையும் எவ்வாறு வெற்றி கொண்டார்?... என ஐயுற வைக்கின்றது.

* சங்க காலம் தொடக்கம் பல்லவ காலங் கடந்து பாரதி காலம்வரைக்கும் தமிழ்ப் பாவையிவள் அனுபவித்து வந்த முரண்பட்ட உணர்ச்சிகளுக்கு எவ்வாறு இலக்கிய வடிவம் கொடுக்கப்படல் வேண்டுமென்பது முதலாவது பிரச்சினை. (ஆனால், இது பாரதூரமான தொரு பிரச்சினையல்ல)

* அதேசமயம் கவிஞனின் உணர்ச்சி வெளிப்பாடுகள் சரித்திரச் சான்றுகளைத் தகர்க்காத வண்ணம் கவிதைகளில் எவ்வாறு பிரயோகிக்கப்படல் வேண்டுமென்பது இரண்டாவது தலையாய பிரச்சினையாகும்.

இவ்வாறு பிரச்சினைகளையும் தனது இயல்பான கவிதா சக்தியைப் பிரயோகிப்பதன் மூலம் வாகரைவாணன் வெற்றி கொள்கின்றார்.

ஆரம்பத்தையே பாருங்களேன்.

அப்போது புரியும் அவரின் தனித்திறமை.

தேவனவன் பெற்றெடுக்க
தென்மதுரைப் பாண்டியனார்
ஆவலுடன் வளர்த்த மகள்
அழகு தமிழ்ப் பெண்பாவாய்!
ஏவலரில் ஒருவன் நான்
என்கையால் உனைத் தூக்கி
ஆவலது தீரும் வரை
அணைத்திருக்க வேண்டுமம்மா!

என்னே மென்மையான வார்த்தைப் பிரயோகங்கள்!...கடைசி நான்கு வரிகளை மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பாருங்கள். தமிழ்க் கவிஞனொருவனின் மொழியார்வத்தை வெளிப்படுத்த இதைவிட வேறு அருமையான சொல்லாட்சிகள் கிடைக்குமா?...

சில கவிதைகளைப் பார்க்கும் போது கவிஞர் சொற்களை ஆள்கின்றாரா அல்லது சொற்கள்தான் கவிஞரை ஆள்கின்றனவா என்று திகைக்க வேண்டியுள்ளது. உதாரணத்துக்கு;

தென் பொதிகைச் சாரலிலே
தென்றலவள் கூடவர
கண் பொதியும் எழிற்செல்வம்
களித்து நீ நடந்தாயாம்
மண்பொதியும் வைகையிலே
மலரோடு புனலாடி
பொன் பொதியும் உடலோடு
புகார் நோக்கி எழுந்தாயாம்!

சொற்களைக் கவிஞர் பொதிந்த அழகே தனி அழகு! இவ்வரிகளை சிறிது சத்தம் போட்டு படித்தீர்களாயின் ஒருவித ஓசை நயம்—வெளிப்படுத்தவியலா ஆனந்தலயிப்பு மனமெங்கும் மலர்வதை அவதானிப்பீர்கள்.

இது ஒன்று மட்டும் உதாரணமாகி விடாது. இன்னும் பல உதாரணங்களை எடுத்துக் கூற முடியும். இவையெல்லாவற்றிலுமே கவிஞனின் "ஆரவார உணர்வுகள்" ஒரு மென்மையான சுகத்துடன் பயணம் செய்வதைக் காண முடிகின்றது.

முகம்மது மதத்தைச் சேர்ந்த "மாலிக் கபூர்"என்பவனின் வரவால் தமிழ்ப்பாவைக்கு ஏற்பட்ட வேதனைகளை—கவிஞர் தனது சொற்

களை முள்ளாக்குவதன் மூலம் வெளிப்படுத்தி எமது இதயத்தையே நோக வைக்கின்றார்.

"....................... ......................

நகமது பிரிந்த சதையாய்
நங்க நீ துடித்துப் போனாய்

நிழல்களானது எவ்வாறு நிஜங்கள் செல்லுமிடமெல்லாம் — நிஜங்களைத் தொடர்ந்து செல்கின்றவோ அதைப் போல ஒரு திறமை மிக்க கவிஞனைத் தேடி சொற் கூட்டங்களும் பின் தொடர்ந்து கொண்டிருக்கும்.

இங்கும் கவிஞரின் கருத்துப் பிரயோகங்களுக்கும் — சொற் பிரயோகங்களுக்குமுள்ள இயல்பான ஒருமையை என்னால் காண முடிகின்றது. திரு. ஈழவேந்தன் அவர்கள் கூறும் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. "கவிஞரின் கவிதையில் இடம் பெற்றுள்ள சொற்கள் அவர் தேடிச் சென்ற சொற்களாகவன்றி அவரை நாடி வந்த சொற்களாகவே விளங்குகின்றன. இதைத் தான் நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

வெள்ளையர் ஆட்சிக் கால வேதனையை விளக்கும் கவிஞர்;— "வெள்ளையர் ஆட்சிக் காலம்! விடுதலை வேட்கை பற்றிக் கொள்ளியாய் எரிந்த காலம்" —இப்படியாக விளக்கிவிட்டு, வெள்ளையனின் தொல்லை தாங்காமல் கோழைகள் கூட வெள்ளையனை விரட்டக் கிளம்பிய விதத்தை

"...................... .....................

கோழைகள் தானும் மெத்தத்
துள்ளியே எழுந்த காலம்.

இதனுடன் நமது கவிஞர் நின்று விடவில்லை. அந்தக் கோழைகளையும் வீரர்களாக்கி விட்டுத்தான் முடிக்கின்றார்.

அதாவது வெள்ளையனின் தொல்லை தாங்காது துள்ளியெழுந்த கோழைகள் துணிந்து தம் உயிரைப் பரிசாய் அள்ளி வைத்த காலமாம்.

இத்தனை சிறப்புக்கள் இருந்தாலும் கவிதைகளின் ஒரு சில இடங்களில் சிறு தொய்வு நிலைகளையும் காண முடிகின்றது. ஆனால், இந்தத் தொய்வுகளைக் கவிஞர் இனங்கண்டு — அகற்ற முனைந்திருப்பாராயின் அச் செயல் கவிதையின் கட்டுக் கோப்பையே குலைத்திருக்கலாம். இதன் இன்னொரு முக்கிய குறைபாடு என்னவெனில்,— தமிழகத்தில் நெல்லுக்குப் பஞ்சமென்றாலும் செந்தமிழ்ச் சொல் வீச்சுகளுக்குப் பஞ்சம் வராது பாதுகாத்த பைந்தமிழ்க்காவலன் அண்ணாவையும்—ஈழத் தமிழன் தூசித்துயர் துடைக்க கவிவாள் வீசி இளம்பருவமதை வீணாக்கிய அண்ணன் காசியையும் தமிழ்ப்பாவையவன் மறந்ததேனோ?

# புலியைப் பற்றி சில தகவல்கள்!

புலி ஆங்கில மொழியில் 'டைகர்' என அழைக்கப்படுகிறது. "டைகர்" என்னும் சொல் பாரசீகச் சொல். அதற்கு அம்பு என்று பொருள். அம்பு நாணேற்றி விட்டதும் விரைந்து செல்கின்றது. புலியும் அதைப் போலப் பாய்ந்து செல்வதால் 'டைகர்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. உலகிலேயே மிக விரைவாக ஓடக்கூடிய விலங்கு புலிதான்.

குரங்குகள், யானைகள் ஆகியவை போன்று புலிகள் கூட்டமாக வாழ்வதில்லை. ஒரு புலி காட்டில் இருந்தால் 24 முதல் 32 சதுர கிலோ மீற்றர் வரை பரப்பளவுள்ள இடத்தை அது தனக்கே உரிமையாக்கிக் கொள்கிறது. அந்த எல்லைக்குள் வேறு எந்தப் புலியையும் வர விடுவதில்லை. புலிக்கு விரோதி மற்றொரு புலி தான்! அடர்ந்த காட்டில் புலியானது தான் மன்னன் என்ற துணிவுடன் பிற விலங்குகளைப் பொருட்படுத்தாது திரியும். புலியைப் போல வலிய விலங்கு தமிழ் நாட்டில் இல்லை. எனவேதான் புலவர்கள் காட்டு விலங்குகளுள் புலியை முதன்மையாகக் கருதி சங்க இலக்கியங்களில் பாடியுள்ளனர். இதற்கு உழுவை, ஊகம், கொடுவரி, தரக்கு, நீவி, பாய்மா, மிருகாரி, வயமா, வயவரி, வல்லியம், வியாக்கிரம், வியாளம், வெல்லுமா, வேங்கை முதலிய பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன.

புலி, சிங்கத்தை விடச் சற்று பெரியது. நேருக்கு நேர் நின்று போரிடுமாயின் எதை எது வெல்லும் என்று கூறமுடியாது. சிங்கம் அடர்ந்த காடுகளில் காணப்படும் விலங்கு அன்று. புலி வாழும் சூழ்நிலையில் சிங்கம் வாழாது.

புலி மிகவும் சூழ்ச்சியுள்ள விலங்கு. இரை தேடத் தனியாகவே செல்லும். அவ்வாறு செல்லும்போது குறிப்பிட்ட ஒரு வழியிலேயே செல்வது புலியினுடைய விந்தையான இயல்புகளில் ஒன்றாகும். இந்த வழி பல கிலோ மீற்றர்கள் இருக்கலாம்; நூற்றுக் கணக்கான கிலோ மீற்றர் தொலைவு கூட இருக்கலாம். ஆனால் எப்போதும் புலி ஒரே வழியைத்தான் பின்பற்றுகின்றது!

நன்றி: கலைக்கதிர், டிசம்பர் 1978
(பக். 53-54)
தகவல்: ஸ்ரீகாந்தா.

## பளிச்சிடும் வெண்மைக்கு பாவியுங்கள்

★ மில்க்வைற் நீலசோப்

★ மில்க்வைற் வெள்ளைசோப்




உங்கள் அபிமானத்துக்குரிய

- மில்க்வைற் நீலசோப்
- மில்க்வைற் வெள்ளைசோப்

சம்பூரண சலவைக்கு மிகவும் சிறந்தது

★ விலை ரூபா ஒன்று மட்டுமே

மேலுறைகளை அனுப்பி
பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**மில்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. எண். 77—யாழ்ப்பாணம்

தொலைபேசி: 7233


### "சுடர்" வட்ட நிபந்தனை

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்-நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுதுபோக்கு விபரக் குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் வட்டம்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

### 'சுடர்' சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆறு திங்கள் | — 9-00 |
| ஒரு ஆண்டு | — 18-00 |

(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ...............................................

விலாசம்: ...............................................

...............................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12 இல் உள்ள இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.